உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௬.] வெகுதானிய௵ பங்குனி௴ [பகுதி-௫

Vol. 36. March—April 1939. No. 5.

வான்மீகரும் தமிழும்.

[௧௫௪-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

IV. மாநுஷபாஷை-(மானிடர்தம்மொழி) தமிழ்.

சுந்தரகாண்டத்தின் 29-வது சர்க்கத்தின் 15-முதல் 19-வரையுள்ள சுலோகங்களால் அநுமான் சீதையைக் கண்டு பேச வேண்டி என்னபாஷையில் எவ்விதமாகப் பேசலாம் என்பதுபற்றி ஆலோசிக்கிற விவரம் சொல்லப்படுகிறது. அந்தச் சுலோகங்கள்,

1 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂𑌤𑍍𑌵𑌹 𑌮𑌾𑌸𑌾𑌦𑍍𑌯 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍀𑌨𑌾 𑌮𑌿𑌹𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।
2 𑌶𑌨𑍈 𑌰𑌾𑌶𑍍𑌵𑌾𑌸𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌸𑌨𑍍𑌤𑌾𑌪𑌬𑌹𑍁𑌲𑌾𑌮𑌿𑌮𑌾𑌂 ॥
3 𑌅𑌹𑌂 𑌤𑍍𑌵𑌤𑌿𑌤𑌨𑍁𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌾𑌨𑌰𑌶𑍍𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
*4 𑌵𑌾𑌚𑌂𑌚𑍋𑌦𑌾𑌹𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀 𑌮𑌿𑌹𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 ॥
*5 𑌯𑌦𑌿𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿𑌰𑌿𑌵 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 ।
6 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌮𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌭𑍀𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ॥
7 𑌵𑌾𑌨𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌕𑌥𑌂𑌸𑍍𑌯𑌾 𑌦𑌭𑌿𑌭𑌾𑌷𑌣𑌂 ।
8 𑌅𑌵𑌶𑍍𑌯𑌮𑍇𑌵𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌰𑍍𑌥𑌵𑌤𑍍 ॥
9 𑌮𑌯𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑍍𑌵𑌯𑌿𑌤𑍁𑌂𑌶𑌕𑍍𑌯𑌾 ।

* ஐந்தாவது வாக்கியத்திலுள்ள 𑌯𑌦𑌿 என்னும் சப்தத்தையும் நான்காவதுவாக்கியத்திலுள்ள 𑌚 என்னும் சப்தத்தையும் நஷ்டாசுவதக்தரத (𑌨𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌵𑌦𑌗𑍍𑌧𑌰𑌥) ந்யாயத்தாலே 𑌯𑌦𑌿𑌚 என்று சேர்த்து நான்காவது வாக்கியத்திலும் ஐந்தாவதுவாக்கியத்திலும் தனித்தனி கூட்டி மானுஷபாஷை பேசுவேனானாலும், ஸம்ஸ்க்ருதபாஷை பேசுவேனானாலும் என்று பொருள் கொள்ளத்தகும்.

*

10 நாநுயெய உநிஜிதா ॥

என்ற இப் பத்துவாக்கியங்களாம். இவ்வாக்கியப்பொருள் வருமாறு:—

1. நான் இங்கு அரக்கியர்களின் ஒழிவுள்ளசமயமடைந்திருக்கிறேன்.

2. மிகுந்த மனக்கொதிப்புள்ள இவளை மெல்ல ஆறுதலடைவிப்பேன்.

3. நான் (நன்குமதிக்கத்தகாத) மிகுந்த சிறியவடிவுடையனாகவும் வானரனாகவு மிருக்கிறேன்.

4. இங்கு இலக்கணங்களால் நன்றாகச்செய்யப்பெற்ற மாநுஷபாஷைபேசுவேனானாலும்,

5. இருபிறப்பாளன்போல் ஸம்ஸ்க்ருதபாஷை பேசுவேனானாலும்,

*7. வானரனுக்குச் சிறப்பாகத் திருந்தியவாக்கு எப்படியுண்டாகக்கூடும்? (என்று எண்ணி,)

*6. ஸீதை என்னை இராவணனெனநினைந்து அச்சமுறுவாள்.

8. (ஆதலால்) இன்றியமையாது பேசத்தக்கது பொருள் விளங்கத்தக்க மாநுஷபாஷையே;

9. (அதுகொண்டு) என்னால் ஆறுதலடைவிக்கத்தக்கவளாவள்.

10. இங்ஙனம் பொருள்புலப்படத்தக்க மாநுஷபாஷையாற் பேசாது, இலக்கணங்களமைந்த மாநுஷபாஷையாலாவது, ஸம்ஸ்க்ருதபாஷையாலாவது பேசுவேனானால் பழிப்பில்லாத இவள் என்னால் ஆறுதலடைவிக்கத்தக்கவளாகாள். என்பது.

இங்கு அநுமான் தான் பேசத்தெரிந்துகொண்டுள்ள பாஷைகள் சொல்லப்படுகின்றன. அவை:-(1) மாநுஷீவாக், (2) ஸம்ஸ்க்ருதா வாக், (3) மாநுஷம்வாக்யம் என்பன.

இவற்றுள் வாக், வாக்யம் என்பன ஏகவசனத்தால் பாஷையேயாம். ஆகவே மாநுஷீவாக், மாநுஷம்வாக்யம் என்னும் இரண்டும் மாநுஷபாஷை என்றும், ஸம்ஸ்க்ருதாவாக் என்பது ஸம்ஸ்க்ருத பாஷை என்றும் பொருள்கொள்ளத்தகும்.

---

* பொருளியைபுகருதி 6, 7 வாக்கியங்கள் பின்முன்னாக மாற்றப்பட்டன,

இவற்றுள் நான்காவது வாக்யத்தில் ('வாசஞ்சோதாஹரிஷ்யாமி மாநுஷீமிஹ ஸம்ஸ்க்ருதாம்' என்று) மாநுஷபாஷை ஸம்ஸ்க்ருதசப்தத்தால் விசேஷிக்கப்பட்டிருக்கிறது. இதன்பொருள் இலக்கணத்தால் நன்றாகச்செய்யப்பட்ட மாநுஷபாஷை யென்பதாம்.

ஐந்தாவது வாக்யத்தில் ('யதிவாசம்ப்ரதாஸ்யாமி த்விஜாதிரிவ ஸம்ஸ்க்ருதாம்' என்று) ஸம்ஸ்க்ருதபாஷை சொல்லப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஸம்ஸ்க்ருதசப்தம் காரணவிடுகுறியாய்க் கீர்வாண பாஷையை உணர்த்துகின்றது. காரணவாற்றலால் இலக்கணங்களால் நன்றாகச்செய்யப்பெற்றது என்னும் பொருளோடு, இடுகுறியாற்றலால் கீர்வாணபாஷையென்னும் பொருளும் தோன்றுகிறது. மேலும், இதனை மாநுஷபாஷையையடுத்துவைத்தமையால் அதன் மறுதலையான தேவபாஷையென்னும் பொருளும் குறிப்பால் தோன்றுகிறது.

எட்டாவதுவாக்கியத்திற் சொல்லிய மாநுஷம்வாக்யம் என்பதற்கு 'அர்த்தவத்' என்ற விசேஷணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அர்த்தவத் என்பதற்குப் பொருளுடையது என்பது பொருளாகிறது. பொருளுடையதாகாத பாஷை பிறிதொன்றும் இன்மையால் இந்த மாநுஷபாஷையைமட்டும் பொருளுடையது என்று சொல்லியிருப்பது பயனில்கூற்றுவான்செல்லும். அதனைநீக்குதற்கு இங்குச் சொல்லுகிற மாநுஷபாஷைக்குரிய பொருளுடைமையாவது: 'ஒவ்வொருசொல்லும் அததற்குரிய செம்பொருளையுடையவாயிருத்தல்' என்றே கொள்ளவேண்டும். கொள்ளவே, இது செம்பொருளையுடைய செஞ்சொற்றொடர்களால் உலகவழக்காகப் பேசப்படும் மாநுஷபாஷை யென்பதாம்.

இந்த 'அர்த்தவத்' என்னும் விசேஷணம் நான்காவது வாக்கியத்திற்சொல்லிய மாநுஷபாஷைக்குக் கொடுக்கப்படவில்லை. இதனால் அது கற்றோர்க்கல்லது மற்றோர்க்குப் பொருள் இனிது புலப்படாத செய்யுள்நடைபோலுள்ளதொரு மாநுஷபாஷை யென்றவாறாயிற்று. அதற்குக் கொடுத்திருக்கும் 'ஸம்ஸ்க்ருதாம்' (-இலக்கணத்தால் நன்றாகச்செய்யப்பட்டது) என்னும் விசேஷணம் இந்த எட்டாவதுவாக்கியத்திற்சொல்லிய மாநுஷபாஷைக்குக் கொடுக்கப்படவில்லை.

இவற்றால் நான்காவதுவாக்கியத்திற் சொல்லப்பட்ட மாநுஷ பாஷைக்கு, இலக்கணமுடைமை சிறந்ததென்றும், செம்பொருளுடைமை சிறந்ததில்லையென்றும், எட்டாவதுவாக்கியத்திற் சொல்லிய மாநுஷபாஷைக்குச் செம்பொருளுடைமை சிறந்ததென்றும், இலக்கணமுடைமை சிறந்ததில்லையென்றும் சொல்லிய வாறாயிற்று.

நான்காவது வாக்கியத்திற் சொல்லப்பட்ட மாநுஷபாஷை இங்கு விலக்கற்கு இலக்காகவும், எட்டாவதுவாக்கியத்திற்சொல்லப்பட்ட மாநுஷபாஷை இங்கு அநுமான் பேசவேண்டி எடுத்துக் கொள்ளற்கு இலக்காகவும் சொல்லப்பட்டன.

இவற்றால் மாநுஷபாஷை இருவேறுவகைத்தாகப் பகுக்கப் பட்டதாயிற்று.

அவற்றுள் முன்னையது இலக்கணங்களால் நன்றாகச் செய்யப் பட்டதாயும், லக்ஷக வ்யஞ்ஜக சப்தங்களாலும் திரிசொற்களாலும் சமாதி முதலிய பலவகைக்குறிப்புக்களாலும் புணர்த்துரைவகை யாலும் கற்றோர்க்கல்லது மற்றோர்க்குப் பொருளினிதுபுலப்படாத செய்யுள்நடைபோலும் நடையுடையதாயும் இருப்பதாம்.

பின்னையது கற்றோர் கல்லாதோர் எல்லோருக்கும் பொருள் இனிது புலப்படற்குரிய செஞ்சொற்களாலாகிய வாக்கியங்களை யுடைய மாநுஷபாஷையெனவும், இது, இலக்கணத்தால் நன்றாகச் செய்யப்பட்டதென்னுமையால் சிறிது இலக்கணவழுவுடையதா யிருப்பினும் அமையும் எனவும் கூறியவாறாயிற்று.

ஆகவே, மாநுஷபாஷையென்பது,—

(1) இலக்கணத்தால் செப்பஞ்செய்யப்பெற்ற சொற்களால் பொருள் அரிதிற் புலப்படற்குரிய செய்யுள்நடைபோன்ற சிறந்த நடையுடையதும்,

(2) இலக்கணத்தை முக்கியமாகக்கொள்ளாத செஞ்சொற்க ளால் பொருள் எளிதிற் புலப்படுமாறு நாட்டிலுள்ளோரால் வீட்டு வழக்காகவே வழங்கப்பட்டுவரும் உலகநடைபோலும் நடை யுடையதும்,

என இருவேறு நடையுடையதென்று கூறியவாறாயிற்று.

மாநுஷபாஷை யென்பதில் மாநுஷம் என்பது மனிதர்க்குச் சொந்தமாயுள்ளது என்னும் பொருளுணர்த்துகிறது. சொந்தமாயுள்ள பாஷை ஸ்வபாஷை யென்பதாம். இதனுல் ஸம்ஸ்க்ருதம் மனிதர்க்குச் சொந்தமில்லையென்று தெரிகிறது.

மாநுஷபாஷை இரண்டுவகையாகப் பிரித்துரைக்கப்பட்டது போல, ஸம்ஸ்க்ருதபாஷை பிரித்துரைக்கப்படாமையால் அது அக்காலத்தில் உலகவழக்கில் இல்லையென்றும் சாஸ்த்ரபாஷையாக நூல்வழக்கில்மட்டும் உள்ளதாய்க் கற்ருேரால்மட்டும் பேசுதற்குரியதாயிருந்ததென்றும் வெளியாகிறது.

இனி, அநுமான் சீதையிடம் பேசுதற்கு ஆராய்ந்து தெரிந்தெடுத்துக்கொண்ட மாநுஷபாஷை இன்ன பாஷையென்று ஆராயத்தக்கது.

அது சீதை பொருள்தெரிந்துகொள்ளும்படி பேசவேண்டிய பாஷையாகையால் 'கோசலதேசத்துள்ள மானிடராற் பேசப்பட்ட பாஷையாயிருக்கவேண்டும்' என்று வியாக்யாதா சொல்லுகிருர். அது உண்மையே. ஆயினும், அது அக்காலத்தில் இன்ன பாஷையாயிருந்ததென்று வியாக்யானத்திற் பெயர் குறிக்கப்படாமையால் அதனை ஈங்கு ஆராய்ந்து அறியவேண்டும்.

ஆராய்ச்சி. 1.

(1) இலக்கணங்களால் திருத்தஞ்செய்யப்பெற்ற செய்யுள் நடையுடையதும், (2) தேவபாஷையின் மறுதலையானதும், (3) மானிடர்களுக்கு வந்தேறியாகாது சொந்தபாஷை (ஸ்வபாஷை) யாகப் பேசப்பட்டுள்ளதும் ஆன மூன்றுவகை யிலக்கணங்களுடன் இராமாயணகாலத்திலிருந்த பாஷை யாதாயிருக்கலாம்?

(1) இராமாயணகாலத்தில் வடநாட்டில்நின்றும்வந்த அகத்தியர் தொல்காப்பியர் முதலான சங்கமருவிய சான்ருேர்களாலே "வடவேங்கடந் தென்குமரியாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்" ஆகிய இருவேறுவகைப்பட்ட தமிழ்மொழி ஆராயப்பெற்று இலக்கணங்களமைக்கப்பெற்றிருந்தமையாலும்,

(2) வடமொழியாகிய தேவபாஷையின் மறுதலையாய்த் தென்மொழி என்று பெயர்பெற்றமையாலும்,

(3) மானிடரால் பேச்சுவழக்கிலும் வழங்கப்பட்டிருத்தலாலும்,

நான்காவதுவாக்கியத்தால் (1) 'மாநுஷீமிஹஸம்ஸ்க்ருதாம்' என்றது செய்யுணடையான தமிழ்மொழி என்றும், எட்டாவதுவாக்யத்தால் (2) 'மாநுஷம்வாக்யம் அர்த்தவத்' என்றது உலகநடையான தமிழ்மொழி என்றும் அறியத்தகும். இனி மற்றொருவகையாலும் ஆராய்வாம்.

ஆராய்ச்சி. 2.

மாநுஷபாஷை என்பதனால் அது, அதற்கு இனமான தேவபாஷையின் மறுதலையாயிற்று. ஆகவே, தேவபாஷையும் மாநுஷபாஷையின் மறுதலையாயிற்று.

இவ்விரண்டு பாஷையும் கிழக்கும் மேற்கும்போல ஒன்றற்கொன்று மறுதலையாம்; பிறிதொன்றை மறுதலையாகவுடையனவல்ல.

இவ்வாறே தென்மொழியும் வடமொழியும் ஒன்றற்கொன்று மறுதலையே; வேறு மறுதலையுடையனவல்ல.

ஒன்றற்கொன்று மறுதலையாகிய இவற்றுள், ஒருதலையாயுள்ள வடமொழியும் தேவபாஷையும் ஒன்றேயாம் என்று அறிந்துள்ளோம். அதனால், அவற்றின் மறுதலையாகிய தென்மொழியும் மாநுஷபாஷையும் ஒன்றேயாம் என்றறியப்பட்டதாயிற்று. இன்னும் மற்றொருவகையாலும் ஆராய்வாம்.

ஆராய்ச்சி. 3.

தமிழ் என்றசொற்குப் பலரும்பலவகையாகப்பொருள்கூறுவர். அவற்றுள், (1) தம்மொழி என்பதே தமிழ் (எனத் திரிந்தது) என்பதும், (2) இனிமையுடையது-தமிழ் என்பதும்சிறந்தபொருள்களாம்.

மானிடர்பாஷைக்குத் தம்மொழியென்றபெயர் வந்ததெவ்வாறெனின், மானிடர் தாம் பேசும்பாஷைக்கு ஒரு பெயரிடவேண்டும்பொழுது, அப்பெயரானே அதன் இனம் ஒன்றிருக்க அதனை விலக்கவேண்டும். இனமாவது: தன்னிற் பிறிதாகிய மொழி. அது இங்கு தேவபாஷை. ஒருவன் ஒரு விஷயத்தைத் தேவபாஷையிற் பேசும்பொழுது அப்பாஷை தெரியாதானொருவன், அவனைத் தம்மொழி (ஸ்வபாஷை)யில் பேசு என்பான். அதனால் மானிடர்

பேச்சுத் தம்மொழி எனப் பெயர்பெறுவதாகும். மாநுஷபாஷை என்பதற்கும், (மானிடர்) தம்மொழி என்பதற்கும் பொருள் ஒன்றே யாம். ஆதலால் மாநுஷபாஷையின் பரியாயமாக வழங்கற்குரியது தம்மொழி என்பதாம்.

இனி, தம்மொழி தமிழ் எனத் திரியுமாறென்னையெனின், தம்மவர்-தமவர் என்றுவதுபோலத் தம்மொழியென்பது மகரங் கெட்டுத் தமொழியாய், அது, தொடக்கம் துடக்கமாவதுபோல ஒகரம் உகரமாகத் தமுழியாய், அது மாநுடர் மானிடராவது போல உகரம் இகரமாகித் தமிழியாய், அது, அகழி அகழ் ஆவது போல ஈற்றிகரங்கெடத் தமிழ் என்றாயிற்று என்பது.

இது, தமிழ் என்னும் பெயர் உண்டாதற்குவேண்டும் நீண்ட காலத் திரிபாகலாம்.

தம்மொழியென்பதில் தாம் என்பது யாரையெனில் அம் மொழி பேசுதற்குரியவராகிய மானிடரை என்க. அதனால் தம் மொழி என்ற பொருளும் மாநுஷபாஷையென்ற பொருளும் ஒன்றாயிருக்குமாறு காண்க. தம்மொழி எனினும் தமிழ் எனினும் ஸ்வபாஷையெனினும் ஒக்கும்.

இங்ஙனம் வேறுவேறுவகையாகிய முத்திறவாராய்ச்சியானும், அநுமான் சீதையிடம் பேசக்கருதிய மாநுஷபாஷை தமிழ்மொழி என்று தெளியப்பட்டது.

அத்தமிழ்மொழியே முன்பு, ஸம்ஸ்க்ருதமாநுஷபாஷை என்றும், (அர்த்தவத்) பொருளுடைய மாநுஷபாஷை என்றும் இருவகை யாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

அவற்றுள் ஸம்ஸ்க்ருதமாநுஷபாஷை என்பது இலக்கணத் தால் நன்றாகச்செய்யப்பட்ட தமிழ்மொழி என்பதாயிற்று. இதற்கு 'அர்த்தவத்' (செம்பொருளுடையது) என்னும் அடைகொடுக்கப் படாமையால் சொற்களுக்குரிய செம்பொருளுடைமை முக்கிய மில்லையென்றும், இலக்கணமுடைமையே முக்கியமென்றும் அறியத்தக்கன. இவ்வேறுபாட்டால் இது செய்யுள்நடையுடைய தமிழ்மொழியென்று தோன்றுகிறது.

செய்யுள்நடை, பெரும்பாலும் இலக்கணங்களமைந்ததாய்ச் சொற்களுக் குரிய செம்பொருளுடைமையை முக்கியமாகக்கொள்ளாமல் 'செவிகைப்பச் சொற்பொறுக்கும்........கவிகைக் கீழ்த் தங்கும் உலகு' என்பனபோலச் சமாதி முதலிய குறிப்புக்களும் புணர்ந்துரைவகைகளும் உள்ளுறை முதலியனவும் உடையவாய்ப் பெரும்பாலும் சொற்களுக்குரிய செம்பொருளையிழந்து வேறு வேறு குறிப்புப்பொருள்களையுணர்த்தல் காண்க.

இதனின் வேருக, 'அர்த்தவத்' (பொருளுடையது) என்று விசேடிக்கப்பட்ட தமிழ்நடை ஒன்று எட்டாவதுவாக்கியத்தாற் சொல்லப்பட்டுள்ளது. அது ஒவ்வொரு சொல்லும் அதற்குரிய செம்பொருளை ஆற்றலாலுணர்த்தும் செஞ்சொற்றொடர்களாலாகிய தமிழ்நடை. இதற்கு இலக்கணமுடைமை முக்கியமன்று; செம்பொருளுடைமையே முக்கியமாம். செய்யுள்நடையும் பொருளுடையதாயினும், அது இதுபோலச் செம்பொருளுடையதல்லாமையால் இது பொருளுடையதென்று விசேடிக்கப்பட்டது,

ஆதலால் இது, நாட்டிலுள்ள சாமானியசனங்களால் வீட்டு வழக்காகப்பேசப்படும் (இரண்டு கண்ணும் சிவந்தது, லெக்ஷ்மணனை எனக்குத் தெரியும், உன்விஷயமாக வந்தேன். என்பன போலும்) சொற்றொடர்களாலாவது.

இந்நடை, இலக்கணவழுவுடையதாயினும் பொருள் இனிது புலப்படக்கூறுதலால் உலகியற் றமிழ்நடையாயிற்று.

இவ்விருவகையான தமிழ்நடையுள் அநுமான் சீதையிடம் பேசுதற்குச் சூழ்ந்து துணிந்த தமிழ்நடை உலகவழக்கான தமிழ் நடையென்று தோன்றுகிறது.

ஆயினும், இன்னும் இதனை உத்தமகாவியகர்த்தாவான வான்மீகிபகவான் சீதையிடம் அநுமான் பேசுமிடத்தில் இன்னபாஷையில் இன்னவாறு பேசினான் என்று சொல்லுவாரன்றே! அங்கும் அவர் தம் வாயால் என்னென்று சொல்லுகிறார் என்பதையும் ஆராய்வாம். [தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

கம்பராமாயணசாரம்.

[௯௬௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

43 வண்பகை நிற்க வெங்கள் வானரத் தொழிலுக் கேற்ற
புன்பகை காட்டும்[1] யானே[2] புகழ்ப்பகைக் கோருவன்[3] போலாம்
என்பகை தீர்த்தென் னாவி யரசொடு மெனக்குத் தந்த
உன்பகை யுனக்குத்[4] தந்தே னுயிர்சுமந் துழலா[5] நின்றேன்.

கொண்டுகூட்டு:—*வன்பகை நிற்க, எங்கள் வானரத்தொழிலுக்கு ஏற்ற புன்பகைகாட்டும் யானே, புகழ்ப்பகைக்கு ஒருவன்போல் ஆம். என் பகைதீர்த்து என் ஆவி(யை) அரசொடும் எனக்குத் தந்த உன்பகை உனக்குத் தந்தேன். உயிர்சுமந்து உழலாநின்றேன்.*

பொருள்: *கொடியபகைவன் (உயிர் கொல்லப்பட்டொழியாமல்) நிலைத்திருக்க, எங்கள் குரங்குச்சாதித்தொழிலுக்கேற்ற அற்பத்தன்மையான பகைமையைக் காட்டிய யான், (உன்னைச் சேர்ந்தவன், பகையை முடித்தானில்லையென்ற—புகழுக்கு மறுதலையாகிய—பழியை உண்டாக்கி உன்னுடைய) புகழுக்குப் பகையாதற்கு (ஒருவருமில்லை யென்றிருந்தொழிய) ஒருவன் (இருக்கிறானென்று சொல்லும்படி) ஆனேன். (என்னைக் கொன்றுவிடுவானென்று ஒவ்வொருகணமும் நான் பயந்துகொண்டிருந்த) என் பகைவனை -(உடன்பிறந்தே கொல்லும்வியாதியாயிருந்த வாலியை)க் கொன்றொழித்து (உயிரோடிருந்தும் பயத்தினால் செத்தவனாயிருந்த) எனக்கு (அச்சமின்றிக் களிப்புடன் வாழும்) உயிர் வாழ்வைக் கொடுத்ததல்லாமல், இராச்சியச்செல்வத்தையும் ஈந்த உனக்கு உன் பகைவனை (ஒழிக்கக்கடவேனான நான் ஒழிக்காமல் நீ ஒழிக்கும்படி) விட்டிட்டேன். (இவ்வாறாகப் பயன்படாது பூமிக்குப் பாரமான என்) உயிரைச் சுமந்து உழன்றுகொண்டிருக்கின்றேன்.*

வன்மை - கடினம். பகை - பகைவன். வன்பகை - கடின (இருதய)முடைய பகைவன் - இராவணன். போல், ஆம், கட்டுரை(ச் சுவைபயக்கும்) அசைச்சொற்கள். உழலுதல் - அலைதல்; சுழலுதல்.

பாடபேதம்: [1] *நாட்டும்.* [2] *யானோர்.* [3] *பகையொருவன்.* [4] *உனக்கே,* [5] *உழல.*

44 செம்புக்குஞ் சிவந்த செங்கட் டிசைநிலைக் களிற்றின் சீற்றக்
கோம்புக்குங் குறைந்த வன்றே[1] யென்னுடைக் குரக்குப் புன்றோள்
அம்புக்கு முன்னஞ்[2] சென்று னரும்பகை முடிப்ப லென்று[3]
வெம்புற்ற மனமும் யானுந் தீதின்றி[4] மீள வந்தேன்.

கொண்டுகூட்டு: என்னுடைய புன்குரங்குத் தோள்கள் செம்புக்கும் சிவந்த செங்கண் (உடைய) திசை(களில்) நிலை(யாக நிற்கும்) சீற்றக்களிற்றின் கொம்புக்கும் குறைந்த அன்றே! அம்புக்குமுன்னம் சென்று உன் அரும்பகை முடிப்பல் என்று வெம்புற்ற மனமும் யானும் தீதின்றி மீள வந்தேன்.

பொருள்: என்னுடைய (வலிகுறைந்த) அற்பக் குரங்குக் கைகள், சிவந்த செம்பினும் மிக அதிகமாகச் சிவந்த கண்களை யுடைய (எட்டுத்) திக்குகளிலும் நிலையாக நிற்றலையுடைய கோபங் கொண்ட திசையானைகளின் (இராவணன் மார்பில் அழுந்திமுழு கும்படி பாய்ந்த) கொம்புகளுக்குங்கூடக் குறைந்த (பலமுடைய)ன வாயின. (வேகமாக, உன்) அம்புக்கும் முன்னதாகச்சென்று உனது (கொல்லுதற்கு) அரிய பகைவனைக் கொல்வேனென்று (கோபித்துக் குதித்துக்) கொதித்த என் மனத்தினோடு யான் (அவனைக் கொல்லுதலாவது, கொல்லும் முயற்சியில் இறத்த லாவது செய்யாமல்) சேமமாக (வெட்கமின்றி) மீண்டுவந்தேன்.

'சிவந்த', 'செம்' என்ற சொற்கள், 'மீமிசைச்சொல்' என்னும் ஒரு பொருட்பன்மொழியாய் மிகச்சிவந்த என்ற பொருள்படநின்றன.

இயல்பாகச் செந்நிறமுடைய யானைக்கண்கள் கோபத்தால் மிகச்சிவந் தன என்றவாறு. யானைகளின் சீற்றத்தை (—கோபத்தை)க் கொம்புகளின் மேலேற்றிச் 'சீற்றக்கொம்பு' என நயம்படக் கூறினான். ஆரம்பசூரத்தன மாகத் தொடக்கத்தில் அம்பினும் வேகமாகச்சென்ற யான் முடிவில் அம்பு செய்யும் கொலைத்தொழிலைச் செய்தேனில்லை என்பது குறிப்பாக 'அம்புக் கும் முன்னம் சென்று' என்றான்.

முடிதல் - சாதல். முடித்தல் - சாகச்செய்தல். முடிப்பல் - சாகச் செய்வேன் - கொல்வேன்.

பகைவனைக் கொல்லவாவது தான் சாகவாவது செய்யாமல் திரும்பி னேனேயென்று மனங்கசந்து தன்னை வெறுத்து நொந்துகொள்வானாய்த் 'தீதின்றி மீளவந்தேன்' என்றான்.

பாடபேதம்:—[1] குறைந்ததுண்டே. [2] முன்பு. [3] அறுப்பே னென்று, அறுப்பே னென்ற. [4] தீதிலேன்.

45 நூல்வலி காட்டுஞ் சிந்தை நும்[1]பெருந் தூதன் வெம்போர்[2]
வேல்வலி காட்டி னோர்க்கும்[3] வில்வலி காட்டி னோர்க்கும்[4]
வால்வலி காட்டிப் போந்த[5] வளநகர் புக்கு மற்றேன்
கால்வலி காட்டிப் போந்தேன்[6] கைவலிக் கவதி யுண்டோ.

கொண்டுகூட்டு:—*நூல்வலிகாட்டும் சிந்தை நும்பெருந்தூதன் வெம்போர் (தனில்) வேல்வலிகாட்டினோர்க்கும் வில்வலிகாட்டினோர்க்கும் வால்வலிகாட்டிப் போந்த வளநகர்புக்கு என் கால்வலி காட்டிப் போந்தேன். கை வலிக்கு அவதி உண்டோ !*

பொருள்: '*(உயர்ந்த) நூல் (களைக்கற்ற கல்வி) வல்லமையை (வாசாலகமென்னும் பேச்சுவல்லமையால்) அறியச்செய்கின்ற மனத்தினையுடையவனும், உனது சிறந்த தூதனுமான அநுமான், கொடியபோரிலே (நெடிய) வில்வலியும் வேல்வலியுங் காட்டிய வீரர்க்கு (எதிராக, நீண்ட) வால்வலியைக் காட்டி (வென்று, வால் பெற்ற வெற்றியை வாலாலேயே விளங்கச் செய்வான்போல, வால் கொண்டு தீக்கொளுத்திச் சுவாலித் தெரிந்த தீச்சுவாலை மண்ணவரேயன்றி விண்ணவருங் காணும் சோதிச் செயத்தம்பமாக விளங்கச்செய்து) வந்த இலங்கையிலேதானே (எதிரியை வெல்லமாட்டாமல் ஓட்டம்பிடித்துக்) கால்வலி காட்டிவந்தேன். (கால்வலி இத்தகையதாக,) கைவலிக்கோ, எல்லையில்லை ! (கைவலி பூச்சியமென்றவாறு)*'.

போந்த - வந்து. புக்கு - புகுந்து.

சிலம்பப்பயிற்சியால் தேகபலம் சிறத்தல்போல, நூற்பயிற்சியால் மனோபலம் சிறத்தல் குறிக்க, நூல்வலிகாட்டுஞ்சிந்தை யென்றான்.

இப்பாட்டுள்படச் சுக்கிரீவன்கூற்று அடங்கிய நான்கு பாட்டுக்களும் இராவணனது இரத்தினகிரீடங்கள்போல்வனவென்றும், அப்பாட்டுக்களில் 'வெறுங்கை வந்தேன்' உயிர்சுமந்துழலா நின்றேன்,' 'தீதின்றி மீளவந்தேன்' 'கைவலிக்கவதி உண்டோ' என்ற அருமந்த கவிச்சுவை கனிந்த நான்கு முடிவுரைகளும் அக்கிரீடங்களினின்று சுக்கிரீவன் பறித்த நாயகமணிகள்போல்வனவென்றும் கூறும்படி அருமையும் அழகுமுடையனவாயிருத்தல் நோக்கி நுகரத்தக்கது.

பாடபேதம்: [1] *நுன்.* [2] *வன்போர்.* [3] *காட்டுவார்க்கும்.* [4] *காட்டுவார்க்கும்.* [5] *மீண்ட.* [6] *மீண்டேன், மீட்டேன்.*

இராவணன் முடிமணிபறித்தது, அபாரவீரச்சேயலென, விபீடணன் விதந்துகூறல்.

[என்றுகூறிச் சுக்கிரீவன் நாணத்தால் தலைகவிழ்ந்து வணங்கி நின்றதுபோது, அவன் செய்துமுடித்த தீரச்செயலின் அருமையை அவனோடு இராமனும் அறிந்துகொள்ளும்படியாக, அவனை நோக்கி விபீடணன் கூறுகின்றான்:—

46 வாங்கிய மணிக ளன்னோன் தலைமிசை மௌலி மேலே
ஓங்கிய வல்ல வோமற் றினியப்பா லுயர்ந்த துண்டோ
தீங்கினன்[1] சிரத்தின் மேலு முயிரினுஞ் சீரி தம்மா
வீங்கிய புகழை யெல்லாம் வேரோடும் வாங்கி விட்டாய்.[2]

கொண்டுகூட்டு: 'வாங்கிய மணிகள் அன்னோன் தலைமிசை மௌலி மேலே ஓங்கிய அல்லவோ, மற்று இனி அப்பால் உயர்ந்தது உண்டோ? தீங்கினன் சிரத்தின்மேலும் உயிரினும் சீரிது. அம்மா! வீங்கியபுகழை யெல்லாம் வேரொடும் வாங்கிவிட்டாய்!

பொருள்: 'நீ பறித்துவந்த (மணிகளைப் பொருட்படுத்துகின்றாயில்லை. உன் வீரச்செயலைப் பேடிச்செயலென்று நொந்து கொள்கின்றாய். அந்த) மணிகள் (திரிலோகாதிபதியான) இராவணன் தலைக்குமேலுள்ள கிரீடத்துக்குமேல் உயர்ந்து விளங்கியவையல்லவோ? அம் மணிகளுக்கு மேலாக உயர்ந்த பொருளும் உண்டோ? அவைகள், அந்தத் தீயோன் சிரத்தினும் உயிரினுஞ் சிறந்தவைகள். (அவைகளைப் பறித்ததனால், உலகமெல்லாம் பரவும்படி) பெருகிய அவனது புகழ்முழுவதையும் வேரோடு பறித்துவிட்டவனானாய்! (உன் செயல்) ஆச்சரியமானது.

வாங்குதல் - பறித்தல். மௌலி - கிரீடம். தீங்கினன் - தீயோன். சீரிது - சிறந்தது - மிக்கது. அம்மா, அதிசயச்சொல்.

இராவணன் தலைகளை ஏனையோர் தலைகளினும் சிறந்தனவாகச் செய்தவை, அவன் தலைகளின்மேலணிந்த கிரீடங்கள். அக்கிரீடங்களைச் சிறந்தனவாகச்செய்தவை, அவைகளின்மேல் விளங்கிய இரத்தினங்கள். ஆதலால், அந்த இரத்தினங்களினும் உயர்ந்த பொருளொன்றுமில்லையென்பான், 'இனி அப்பால் உயர்ந்ததுண்டோ' என்றான். 'இராவணன் முடிமணி பறித்ததனால் அவனுக்கு

நேர்ந்த தீங்கு, அவன் தலைகளைப் பறிப்பதனாலாம் தீங்கினும் (தலைகளைப்பறிப்பதனாலன்றி வேறு வகையால்) உயிரைப்பறிப்பதனால் நேருந் தீங்கினும் கொடுமையானதென, 'தீங்கவன் சிரத்தின்மேலும் உயிரினும் சிறிதம்மா!' என்ற பாடத்துக்குப் பொருள் கொள்க. மணிபறித்த தீங்கு, தலையையும் உயிரையும் பறித்த தீங்கினும் மிக்கதாலது, எவ்வாறெனின், உடலினின்று தலைவேருக்கப்பட்டோ, வேறுவகையாகவோ உயிர் பிரிக்கப்பட்டவன், துன்புறுதற்கிடமில்லை. உயிரைப் பறித்தபின், மணிகளைப்பறித்திருந்தால், அது புகழைப்பறித்ததாகாது. உயிரைப்பறியாமல், மணியைப்பறித்தது, புகழைப்பறித்ததாயிற்று. ஆகவே, மணி பறித்தது, உயிரிழவினும் பேரிழவான புகழிழவை இராவணன் அடையச்செய்ததாயிற்றென்பான் 'வீங்கிய புகழையெல்லாம் வேரோடும் வாங்கிவிட்டாய்' என்றான்.

பாடபேதம். [1] தீங்கவன், தீங்கிவன். [2] பறித்துவிட்டாய், வாங்கிவிட்டான்.

உருத்திரமூர்த்தியும் செய்யமுடியாததைச் சுக்கிரீவன் செய்தானெனல்.

[('நாகத்தின் தலைமேலுள்ள ரத்தினத்தைப் பறிப்பது ஆபத்தானது. அப்படியிருக்க,) நாகராசனான ஆதிசேடன் படத்தின் மேலுள்ள ரத்தினத்தைப் பறிக்க விரும்பினால், கைகொண்டு பறிக்கவேண்டிய அவசியமில்லாமல், காலாலேயே பறித்துவிட வல்ல இராவணனுடைய முடிமணி பறித்த வீரச்செயல் உருத்திரமூர்த்தியாலும் செய்யமுடியாதது. அந்த முடிமணிபறித்த சாகசச்செயல், திருமால் மார்பில் அணியப்பட்டுள்ள கவுத்துவமணியைப் பறித்தலினும் மிக்கசெயலே. நீ இராவணன் முடிமணி பறித்தது, இராமன் செய்யப்போகிற இராவணவதமாகிய மூலவிக்கிரகப் பிரதிஷ்டைக்கு அடி(ப்படையில்) மணியிட்டதாம்' என்று விபீடணன் விதந்துகூறினான். முன், சுக்கிரீவன் தனியே எதிரியிடத்துக்குப் போனது ஆபத்தானதென்று கடிந்த இராமன், இப்போது,

அச் செயலினால்விளைந்த வெற்றி, வராகமூர்த்தியான விட்டுணுவல்லன்றி வேறெவராலும் அடையாமுடியாததென்று மனமாரப் புகழ்ந்தான்.

சூரியாத்தமனமாக, இராமன் இருப்பிடம் சேர்தல்.

தன்மகன் சுக்கிரீவன், இராவணன் கிரீடங்களினின்றும் பறித்த மணிகளைக் கண்ட சூரியன், ['குட்டி குலைக்கத் தாய்க்கு வந்தது கேடு' என்றவாறு, தன் மகன்செயலால் தனக்குத் தீங்கு நேருமென்றும், 'புருஷன் அடித்தானும், கொழுநனைக் கடித்தாளாம்' என்றவாறு, தன் மகன்செய்த துன்பத்துக்காக இராவணன் தன்னைத் துன்புறுத்துவானென்றும், 'பாவம் (செய்தவன்) ஒரு பக்கம் (இருக்க, அவனை விட்டுப்) பழி (வேறு) ஒருபக்கம்' (உள்ளவன்மேல் ஆகும்) என்றவாறாகவும்] 'ஒன்றொழித் தொன்றும்'* என்றவாறாக(வும்) இராவணன் தண்டனை, சுக்கிரீவனை ஒழித்துத் தன் மேலாமென்றும் பயந்து ஒளிப்பான்போல, அத்தமித்தான்.]

இராவணனும் தன் இருப்பிடம்சேர்தல்.

47 என்றுனு மினைய தன்மை யெய்தாத[1] விலங்கை வேந்தன்
நின்றார்க டேவர் கண்டா ரென்பதோர் நாணம் நீள
அன்றுய மகளிர் நோக்க மாடவர் நோக்க மாகப்
பொன்றுது பொன்றி ளுன்றன் புகழெனை விழிந்து போனான்.

கொண்டுகூட்டு: என்று(யி)னும் இனைய தன்மை(யை) எய்தாத இலங்கைவேந்தன், நின்றார்கள்(ஆன) தேவர் கண்டாரென்பதோர் நாணம் நீள, அன்று ஆய மகளிர் நோக்கம் ஆடவர் நோக்கமாகப், பொன்றாது பொன்றினான்; தன் புகழென இழிந்துபோனான்.

பொருள்: (தான் தோன்றியநாள்தொட்டு, இன்றுவரையும்) என்றைக்காயினும், இப்படிப்பட்ட நிலைமையை அடைந்திராத இலங்காதிபதியான இராவணன், (தானும் சுக்கிரீவனும் செய்த தொந்தயுத்தத்தைப் பார்த்துக்கொண்டு) நின்றவர்களான தேவர்கள் (தான் சுக்கிரீவனால் முடிமணி பறிக்கப்பட்டு அவமானமடைந்ததைக்) கண்டார்களென்பதனாலுண்டாகிய வெட்கம் மிகாநிற்க,

* இப்படலம் 'நன்றலி' என்ற 50-ஆம் பாட்டில் உள்ளது.

(இதற்குமுன், தனக்கு மனக்கிளர்ச்சியுண்டாகத் தன்னைக் காமுற்று நோக்கும்) மாதர் நோக்கம் (மனக்கிளர்ச்சியுண்டாக்காத) மைந்தர் நோக்கம்போலாக, உயிர்போகாதிருந்தும் உயிர்போன (பிரேதச் சாயலென்னும் பிணத்தோற்றமுடைய)வனாகி (மலையுச்சிமேலிருந்து பாதாளத்துக்குக் கீழேயிறங்கிவிட்ட) அவன் புகழ்போல, (உத்தர கோபுரத்துச்சியிலிருந்து தன்மாளிகையின் அடித்தளத்துக்கு) இறங்கிப்போனான்.

என்றானும் - என்றாயினும். இனைய - இப்படிப்பட்ட. எய்தாத - எய்தியிராத - அடைந்திராத. அன்று - அப்போது - முடிமணி பதிக்கப்பட்ட போது. ஆயம் - தோழியர்கூட்டம். ஆயமகளிர் - (சாதாரண மாதரல்லாதாராய்த்) தோழியர்கூட்டத்தையுடைய (சிறந்த) மாதர்.

இராக்கதரால் தோல்வியடைந்த தேவர்கள் இராக்கதராசன் தோல்வியடைந்ததைக் காணும்படி நேர்ந்ததேயென்பதனால் ஏற்பட்ட நாணம் வளராநிற்க என்பது, இரண்டாம் அடிக் கருத்து.

பாடபேதம்: [1] எய்திலா. [2] ஆயர்.

மந்தரைசூழ்ச்சிப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள் கழுத்தணி)

[௩௫௦-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

8. அப்பிரதீதம்.

அப்ரதீதம் தத³ாக்²யாதம் ப்ரஸித்³த⁴ம் ஶாஸ்த்ர ஏவ யத் ॥ ௮ ॥

உலகவழக்கில் இல்லாது நூல்வழக்கில்மாத்திரமுள்ள சொல்லைக் கூறுதல் 'அப்பிரதீதம்' எனும் குற்றமாம்.

உதாரணம்:—

கிம் பா⁴ஷிதேந ப³ஹுநா ரூபஸ்கந்த⁴ஸ்ய ஸந்தி மே ந கு³ணா: ।
கு³ணநாந்தரீயகம் ச ப்ரேமேதி நைதத்ஸ்வவாச்யமஸ்மாபி: ॥

விரித்துரைத்தலேன்? உருவத்தால்மட்டும் மனிதனான எனக்கு ஒரு குணமும் இல்லை. உன் பிரியமும் குணமுள்ள இடத்தே நிகழ்வது; ஆதலால் உன்மீது குற்றமில்லை.

'ரூபஸ்கந்த⁴ஸ்ய' எனும் சொல் பௌத்த சாஸ்திரத்திலும், 'கு³ணநாந்தரீயகம்' எனும் சொல் மற்ற நூல்களிலும் மட்டுமே காணப்படுவனவாதலால் இங்கு 'அப்பிரதீதம்' எனுங் குற்றமுண்டாயிற்று. (அப்பிரதீதம் - பொருளறிவுண்டாகாதது.)

9. க்லிஷ்டம்.

உத்ப்ரேக்ஷ்ய பர்யாயஸம்வித்தி: க்லிஷ்டம் நேஷ்டம் ஹி தத்³விதா³ம் ।

சொல்லின்பொருளை விரைவில் அறிந்துகொள்ளவியலாது தாமதித்து அறிந்துகொள்ளுமாறு கூறுதல் 'க்லிஷ்டம்' என்னும் குற்றமாம்.

உதாரணம்:—

விஜிதாத்மபவத்வேஷிகுருபாதஹதோ ஜந:।
ஹிமாபஹாமித்ரதரைர்வ்யாப்தம் வ்யோமாபிநந்ததி॥

கருடனால் (வி-பக்ஷி) ஜயிக்கப்பட்டவன் (இந்திரன்) புதல்வனுக்கு (அருச்சுனனுக்கு)ப் பகைவனுடைய (கர்ணனுடைய) தகப்பன் (சூரியன்) கதிர்களால் வாட்டப்பட்ட மக்கள், பனிப்பகையின் (நெருப்பின்) பகையை (நீரை)ச் சுமப்பவற்றால் (முகில்களால்) வியாபிக்கப்பெற்ற வானத்தைக் கண்டு களிக்கிறார்கள்.

இங்ஙனம் பொருளைச் சுற்றுநெறியாற் கூறுவது வருந்திப் பொருளுணரநிற்றலால் 'க்லிஷ்டம்' எனப்படும்.

10. கூடார்த்தம்.

கூடார்த்தமப்ரஸித்தார்த்தப்ரயோகம் கவயோ விது:॥ ௧௧॥

அடிப்பட்டுவழங்குவதில்லாத சொல்லை வழங்குதலை, அறிஞர் கூடார்த்தமென்னுங் குற்றமென்பர்.

உதாரணம்:—

ஸஹஸ்ரகோரிவாநீகம் பவதோ து:ஸஹம் பரை:।
ஹரேரிவ தவாபாந்தி நாந்யதேஜாம்ஸி தேஜஸி॥

இந்திரனுடைய சேனையைப்போல் உமது சைநியமும் விரோதிகளால் பொறுக்கமுடியாதது. சூரியனுடைய ஒளியில் மற்ற ஒளிகள் மழுங்கிவிடுவதுபோல் உமது ஒளியில் மற்ற ஒளிகள் விளங்கவில்லை.

இங்கே 'ஸஹஸ்ரகோ' என்பதில் கண்ணென்னும் பொருளில் 'கோ' என்னும் சொல்லும், இந்திரனென்னும் பொருளில் 'ஹரி' என்னும் சொல்லும் வழங்குதல் அரியனவாதலால் 'கூடார்த்தம்' என்னும் குற்றமாம்.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.

மதுரை.

ஸ்ரீ:

பழனிக்கோவை.

[௧௭௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

20. கட்டுவித்திகூறல்.

கச்சுங் கழலுங் குருகுந் தகருங்கை வேலொளியு
மெய்ச்சுந் தரம்பல் வகைக்கா ரணக்குறி யும்விளங்கு
மிச்சங்கை கேட்பதென் னெற்குறித் தோன்றிவன் யாவனென்னி
லச்சந் தவிர்த்த மயிலோன் பழனிக் கதிபதியே. (285)

மூன்றிரண்டொருநெற் றோன்றியகுறியா
லடிகொடியுவகை விடுவித்துரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தன்கருமமுற்றுதல்.

21. வேலனையழைத்தல்.

வெறியா டுகநம் பழனிச்செவ் வேண்முன்றில் வேலன்கையின்
மறியாடு கவ்வுங் குளகோடும் வெட்டுக மாப்பலிகள்
குறியா டவர்முது பெண்டீர் கொடுமிக் குடிப்பிறந்த
சிறியாடன் னேய்க்கினங் கூட்டிய காக்கையிற் செய்ததற்கே. (286)

வெறியாட்டயரும் வேலனைக்கூஉய்
எறிவேற்கண்ணித னின்றூர்நின்றது.

மெய்ப்பாடு—இளிவரல். பயன்—தலைமகளது வேறுபாடுநீக்குதல்.

22. இன்னலெய்தல்.

பேய்வெறி செய்து மறிகொன் றம் பிரம் பெயர்ந்தகன்றூற்
சேய்வடி வேலர் பழனியெஞ் சேர்ப்பர்க்கென் செய்கையென்னும்
நோய்வெறி யாற்றவி ராதேதற் பிறர்சொல்லு நோய்க்கென்செய்வேன்
மாய்வுறு தேய்வுக்கும் பாம்புக்குந் தேம்பு மதியென்னவே. (287)

வெறியாடுவதி லுறுவதொன் றுணரா
தன்னுண்மருங்கு லின்னலெய்தியது.

மெய்ப்பாடு—அச்சத்தைச்சார்ந்த மருட்கை. பயன்—தலைமகள் தன்
னெஞ்சொடுசொல்லி யாற்றுதல்.

23. வெறிவிலக்கநினைத்தல்.

துறைவோர் கவருந் திறையாகித் தோழிக்குஞ் சொல்லகில்லா
மறைநா னவட்கொளித் துய்வாறெங் கேமறை வல்லவனைச்
சிறையார் களத்திட்டு வையா புரிக்கந்தர் தீர்த்ததிலெம்
மிறையாலல் லாற்பிறர் தீர்க்கவுங் கூடுங்கொ லென்றயரே. (288)

வெறியால்வருத்த முறுமாறெண்ணி
மற்றதுவிலக்கப் பொற்றொடிநினைந்தது.

மெய்ப்பாடு—இளிவரலைச்சார்ந்த நகை. பயன்—வெறிவிலக்குதற் கொருப்படுத்தல்.

24. அறத்தொடுநிற்றலையுரைத்தல்.

புயலா திரண்டன்ன கையார் பழனிப் புரிகுழலா
யயலாரு மூரு நகரீயு மன்னையு மென்னை வைய
மயலாகிற் சூளிட் டுனக்குண்மை சொல்வன் மனுமகன்விற்
பயில்வாலிப் பார்மக ளாவாகிக் கீழ்ச்சொரி பாலென்னவே. (289)

முற்றிழையறத்தொடு நிற்றலையுரைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—அறத்தொடுநிற்றல்

25. அறத்தொடுநிற்றல்.

பொய்தவி ணீயில்லைக் கீழ்காற் றெறிந்தலை போர்.........
நைதலுற் றேனுயிர் சிற்றில்பொற் பாவைக ணல்கிநின்றான்
கைதகு வேலர் பழனியெய் தார்கரு வொத்தகட
லெய்தமுன் கூடல் புரந்தாற் கொப்பாமொ ரிளையவனே. (290)

வெறித்தலைவெரீஇ யறத்தொடுநின்றது.

மெய்ப்பாடும் பயனும் அது.

26. ஐயந்தீரக்கூறல்.

வேலிக்குண் மூசி வெயில்காற்றெறிப் தாப்பொழின் மேகம்பெய்யு
மாலிக் கொளிக்குங்கொ லிற்பழி யாயினும் யாயறிந்தாண்
மாலிற்கண் காக்குந் துகள்போன் மறைத்தென்வை யாபுரிவேள்
பீலிப்பைந் தோகையொப் பாய்துறை வோற்கெய்தும் போலரே.()

விலக்குதல்கருது மேதகுதோழி
யலக்கண்டீர வரிவைக்கிசைத்தது.

மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—தலைமகளை யாற்றுவித்தல்.

27. வெறிவிலக்கல்.

உடையா ரடுமைக ளுண்டென்று நண்ணவொண் ணுதென்பதார்
புடையாழ்புனற்கெம்மைக்காத்தான்புயநிற்கப்பொய்யெண்ணினுல்
விடையாளர் பிள்ளைப் பழனிச்செவ் வேணிற்க வேம்பன்வெப்பம்
துடையாதெழேமென்றகுண்டரொப்பாயெங்கள்சூர்த்தெய்வமே.

அறநிலைப்பாங்கி வெறிவிலக்கியது.

மெய்ப்பாடு — பெருமிதஞ்சார்ந்த நகை. பயன்—குறிப்பினுல் வெறி விலக்குதல்.

28. செவிலிக்குத் தோழி யறத்தொடுநிற்றல்.

இதையாம் புனத்திற் கிளிகடி பாவம்வந் தேற்றதென
மதயானை யொன்றுன் மகளாங் கரும்பை வருத்திடுங்காற்
சுதையாரு மும்பரைக் காத்தோர் பழனியிற் சூட்டரவி
லுதையா தவற்பிரித் தாங்குயிர் மீட்டன னோர்வள்ளலே. (293)

நிறத்தொடுசெவிலிக் கறத்தொடுநின்றது.

மெய்ப்பாடு—அது. பயன்—வெளிப்படையா லறத்தொடுநிற்றல்.

29. நற்றுய்க்குச் செவிலி யறத்தொடுநிற்றல்.

மலைமற வாணர் மகள்கோன் பழனி மருக்கொழுந்து
கலைமறையாப்பிறைபோல்யாம்வளர்த்தபெண்கற்பென்சொல்கேன்
சிலைமற வான்மிகர் மார்க்கண் டயர்சுகர் தேர்ச்சியென்ன
முலைமற வாமுன் முதுக்குறைந் தாள்குடி மூப்பிக்கவே. (294)

கற்புமாசாரமுங் கற்பித்தெடுத்தவள்
அற்புறுநற்றுய்க் கறத்தொடுநின்றது.

மெய்ப்பாடு—உவகை. பயன்—நற்றுய்க் கறத்தொடுநிற்றல்.

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,

உதவிப்பத்திராசிரியர்.

அறுபதினாயிரம்.

பே. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள்.

[௧௭௰-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

4. சகரன்மைந்தர்.

இராமனுடைய முன்னோர்களிலே சகரன் என்பவன் ஒருவன். அவன் நீதிதவறாமல் அரசுபுரிந்துவந்தான். அவனுக்குக் கேசினி, ஸுமதி என்று இரண்டு மனைவிகள் உண்டு. ஆயினும் பிள்ளைகள் இல்லை. ஆகையால் அவனும் அவனுடைய மனைவியருமாக இமயமலைச்சாரலை அடைந்து, கடுந்தவம் புரிந்தார்கள். இவ்வாறு நூறு வருஷங்கள் சென்றன. அப்பொழுது பிருகுரிஷியானவர் அவர்கள் முன்னேதோன்றி வரம் அளித்தார்: ஒரு மனைவிக்கு வமிசத்தை விருத்திசெய்யும் ஒரு பிள்ளையும், மற்றொருத்திக்கு மிக்க பலசாலிகளான அறுபதினாயிரம் பிள்ளைகளும் உண்டாவார்கள் என்றார். கேசினி தனக்கு ஒருபிள்ளை போதும் என்றாள். அவளிடம் பிறந்தவன் அஸமஞ்ஜஸன். ஸுமதி அறுபதினாயிரம் பிள்ளைகள் வேண்டுமென்றாள். அப்படிப் பிறந்த அறுபதினாயிரம் பிள்ளைகளே சகரர்.

பிறகு சகரன் அசுவமேதயாகத்தைத் தொடங்கினான். குதிரை இடம் இடமாகச் சென்றது. அசூயைகொண்ட இந்திரன், அதைத் திருடிக்கொண்டுபோய்க் கபிலர் தவஞ்செய்துகொண்டிருந்த இடத்தில் விட்டுவிட்டான். குதிரை காணாமற்போகவே 'குதிரையைக் கண்டுபிடியுங்கள்' என்று சகரன் தன்னுடைய அறுபதினாயிரம் மைந்தரையும் ஏவினான். அவர்கள் எவ்வளவு தேடியும் குதிரை அகப்படவில்லை. பிறகு அவர்கள் நிலத்தையே தோண்டத் தொடங்கினார்கள். ஆளுக்கு ஒரு யோஜனை தூரம் தோண்டவேண்டுமென்று பங்கிட்டுக்கொண்டார்கள்;[1] அவர்கள் தோண்டினதும்

---

[1] யோஜநாயாமவிஸ்தாரமேகைகோ தரணீதலம்।

வால. xxxix—18.

அறுபதினாயிரம் யோஜனைகளே.[1] அப்பொழுதும் குதிரை அகப்படவில்லை. மறுபடியும் கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், பிறகு வடக்கிலுமாகத் தோண்டினார்கள்; கடைசியாகக் கபிலரைக் கண்டார்கள். அவருக்குப் பக்கத்திலே குதிரை இருந்தது. மண்வெட்டி முதலியவற்றைக் கையிலேந்தியவராய்க் கபிலரைத் தாக்கினார்கள். 'உம்' என்றார் கபிலர். அவர்கள் யாவரும் சாம்பற்குவியலானார்கள். இது வால்மீகிராமாயணக் கதை.

சகரபுத்திரர்களுடைய பெயர்களை வால்மீகி குறிப்பிடவில்லை. குறிப்பிட்டிருந்தால் அவருடைய இராமாயணம் இன்னும் பெரிதாகியிருக்கும்.

கம்பராமாயணத்திலும் இதே கதைதான் சொல்லப்படுகிறது. ஆனால், ஓரிரண்டு இடங்களில் வேற்றுமைகள் காணப்படுகின்றன. வால்மீகி சொன்னதுபோலவே, சகரனுடைய மனைவி ஒருத்திக்கு ஒரே ஒரு புதல்வன் உண்டு என்றும், மற்றொருத்திக்கு அறுபதினாயிரம் புதல்வர்கள் பிறந்தார்கள் என்றும், அவர்கள் தர்மமுறையைப் பாதுகாவாதவர்கள் என்றும் கம்பர் சொல்லுகிறார். ஆனால், கேசினியின் புத்திரனின் பெயர் அஸமஞ்ஜன் என்று வால்மீகி சொல்லியிருக்க, இவர் போசணன் என்று சொல்லுகிறார். அவன் சேய் அம்சுமான் என்கிறார்.

> விறல்கொள் வேந்தனுக் குரியவர் இருவரில் விதர்ப்பை
> பொறையின் நல்கிய போசணன் என்றொரு புதல்வன்
> பறவை வேந்தனுக் கிளையமென் சுமதிமுற் பயந்த
> அறனில் மைந்தர் ஆறயுதர் மற் றஞ்சுமான் அவன்சேய்.
>
> [கம்ப. அகலிகை. 34.]

சிலபிரதிகளிலே இரண்டாவதுவரி 'பொறையின் நல்கிய அசமஞ்சற் கஞ்சுமான் புதல்வன்' என்று காணப்படுகிறது. தீக்குணங்கள் நிரம்பியவனாய்த் தன் தகப்பனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட அசமஞ்ஜனைப் பிள்ளையாகச் சொல்லி நிறுத்தாமல், அவனுக்குப் பிறந்தவனான குணம்நிரம்பிய அம்சுமானையும் இது குறிப்பிடுகிறது. மேலும் நான்காம்வரி 'அறனில் மைந்தர்கள் அறுபதினாயிரர் வலத்தார்' என்று காணப்படுகிறது.

---

[1] யொஜநாநாம் ஸஹஸ்ராணி ஷஷ்டிம் து ரகுநந்தந।
பால. xxxix—21.

சகரனுடைய ஏவலின்படி பூமியைத் தோண்டிய சகரர்கள் முதலில் அறுபதினாயிரம் யோஜனை தோண்டினார்கள்; பிறகும் அவர்கள் தோண்டினார்கள் என்று வால்மீகி சொல்லுகிறார். ஆனால் இரண்டாம்முறை தோண்டினது எவ்வளவு என்று குறிப்பிடவில்லை. கம்பர் சொல்வது வருமாறு:

குதிரையைக் காணவில்லை என்று அம்சுமான் சொன்னான். அதைக் கேட்ட சகரன் தன் பிள்ளைகளிடம் வருத்தத்தோடு தெரிவித்தான். அவர்கள் வடவாக்கினியைப்போல் கோபித்துக் கண்கள் நெருப்புச் சிந்தப் பூமி முழுதும் தேடிப்பார்த்தார்கள். பாதாளம் தோன்றும்படியாகத் தோண்டினார்கள்.

கேட்ட வேந்தனும் மதலையர்க் கம்மொழி கிளத்த
வாட்டம் மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி
நாட்டம் வெங்கனல் பொழிதர நானிலம் தடவித்
தோட்டு நுங்கினர் புவியினைப் பாதலம் தோன்ற.

[கம்ப. அகலிகை. 37.]

பிறகு அவர்கள் மறுபடியும் தோண்டினார்கள். அவர்கள் தோண்டிய அளவு நூறுயோசனை அகலமும் ஆழமும், வடகிழக்குத் திக்கிலே, என்று சொல்லப்படுகிறது. மேன்மேலும் வளர்ந்து கொண்டிருக்கும் பெருந்தவத்தையுடைய கபிலமுனிவருடைய பக்கத்திலே குதிரையைக் கண்டார்கள், நெருப்புப்போலே சீறினார்கள், வைதார்கள், மிகவும் இறுமாப்போடு அம்முனிவரை நெருங்கிச் சூழ்ந்துகொண்டு துன்புறுத்தினார்கள்:

நூறு யோசனை அகலமும் ஆழமும் நுடங்கக்
கூறு செய்தனர் என்பரால் வடகுண திசையின்
ஏறு மாதவக் கபிலனின் இவுளிகண் டெரியிற்
சீறி வைதனர் செருக்கினர் நெருக்கினர் செறுத்தார்.

[கம்ப. அகலிகை. 38].

இச் செய்யுளிலே இரண்டாவது அடியில் 'என்பர்' என்று காணப்படுகிறது. 'என்று சொல்லுவார்' என்பது இதன்பொருள். 'முதல்நூலாசிரியராகிய வால்மீகி சொல்லுகிறார்' என்று சில உரைகளிலே காணப்படுகிறது. ஆனால் வால்மீகி அப்படிச்சொல்லவில்லை. கம்பர் சொல்லும் விருத்தாந்தத்தில் கொஞ்சம் திசை

மாருட்டமும் இருக்கிறது. வால்மீகி அளவைக் குறிப்பிடும் இடத்தில் இவர் குறிப்பிடவில்லை. வால்மீகி அளவு சொல்லாத இடத்தில் இவர் அளவைக் குறிப்பிடுகிறார்; பொறுப்பை வேறொருவர்மேல் போடுகிறார்.

இவ்வாறு சகரன்மைந்தர்கள் நெருக்கித்தாக்கவும் கபிலருக்குக் கடுமையான கோபம் மூண்டது. அவர் கோபங்கொண்டு சீறிக் கண்ணைத் திறந்துபார்த்தார். ஜ்வாலை கிளம்பிற்று. பூளைப் பூவைச் சூடின பரமசிவனுடைய புன்சிரிப்பினாலே திரிபுரங்கள் சாம்பரானமைபோல, அந்த அறுபதினாயிரம் அரசகுமாரர்களும் சாம்பராய் அவிந்துபோனார்கள். கூடச்சென்ற ஒற்றர்கள் இந்த விருத்தாந்தத்தை யாகத்தை மேற்கொண்டிருக்கும் சகரனுக்குச் சொன்னார்கள் என்கிறார் கம்பர்:

மூளும் வெஞ்சினத் தருந்தவன் முனிந்தெரி விழிப்பப்
பூளை சூடிதன் நகையினில் எயில்பொடிந் தனபோல்
ஆளும் மைந்தர் ஆறயுதரும் சாம்பராய் அவிந்தார்
வேள்வி கொண்டநல் வேந்தனுக் குரைத்தனர் வேய்கள்.

[கம்ப. அகலிகை. 39.]

இந்த இடத்தை வருணிக்கும்போது வால்மீகி சகரன்மைந்தர் அனைவரும் சாம்பற்குவியலாயினர்[1] என்று மட்டிலும் சொல்லுகிறார். தொகையைக் குறிப்பிடவில்லை. ஆனால் அவரும் அடிக்கடி சகரன்மைந்தர் அறுபதினாயிரர் என்று அந்தத் தொகையைக் குறிப்பிட்டுக்கொண்டேயிருக்கிறார்.[2] அவ்வாறே கம்பரும் இவ்விடத்தில் அவர்களுடைய தொகையைக் குறிப்பிடுகிறார்.

அந்தத் தொகையில் இவ்வளவு ஆசையுள்ள கம்பர் ஓர் இடத்தில் அதைச் சொல்லாமலே விட்டுவிட்டார். மற்றோர் இடத்தில் மிகக் குறைவான தொகையைக் குறிப்பிட்டிருக்கிறார் ஏன்?

---

1 𑌭𑌸𑍍𑌮𑌰𑌾𑌶𑍀𑌕𑍃𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥 𑌸𑌗𑌰𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌃 ।

𑌬𑌾𑌲. xi—31.

2 𑌬𑌾𑌲. xxxviii—8, 14, 17, 19; xxxix—12; xl. 12, 19, 23. xli. 21; xliv—3,

பழந்தமிழகத்தின் தெற்கெல்லை.

[கஉ0-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

இனி, குமரி என்பது யாறு? அன்றி மலையா? என ஒரு தலையாத் துணிவது இவ்வாராய்ச்சிக்கு இன்றியமையாததன்று. எதுவேயாயினும், குமரி யாண்டையதென்பதே இங்கு ஆராய்ச்சிப்பொருளாகும்.

பண்டைப் பெரும்புலவர்களும் பழையவுரைகாரரெல்லாரும் 'குமரி'யை யாறெனக்கொண்டதனோடமையாது அதுவே தொன்றுதொட்டுத் தமிழகத்தின் தெற்கெல்லையெனவும் கொண்டுள்ளார்கள் என்பது மேற்காட்டிய மேற்கோள்களால் தெளிவாகின்றது.

மகாமகோபாத்யாய சாமிநாதையரவர்கள் சிலப்பதிகார அரும்பதவகராதியில் 'குமரி தென்பாற்கண்ணதோராறு; இது முற்காலத்தே கடல்கொள்ளப்பட்டது' எனக் கூறிக் குமரிபற்றிய பழங்கொள்கைக்குத் தம்முடம்பாடு தந்துள்ளார்கள்.

ஆனால் அவர்கள் தரும் மற்றொருகுறிப்புக் குமரியே பண்டைத் தமிழகத்தின் தெற்கெல்லையென்னுங் கொள்கையில் சிறிது ஐயம் விளைவிக்கின்றது. 'பஃறுளியாறு குமரியாற்றிற்குத் தெற்கின்கண்ணோடிய ஓராறு' என்பது அவர்கள் எழுதும் மற்றொரு குறிப்பு.

பஃறுளியாறு பாண்டியநாட்டில் கடல்கோளுக்குமுன் ஓடிய ஓராறு என்பது புலவருலகில் அனைவருக்கும் ஒப்பமுடிந்த செய்தியாகும். முதுகுடுமிப்பெருவழுதியைப் பாடிய நெட்டிமையார்,

> 'எங்கோ வாழிய குடுமி....................
> ....
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே' (புறம். 9.)

என வாழ்த்துதலால் பஃறுளி யாறு என்பதும் அது பண்டைப் பாண்டிநாட்டது என்பதும் தெளிகின்றோம்.

'பஃறுளியாற்றுடன்..............
குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள'

(காடுகாண்காதை. அடி 19. 20)

என்னும் சிலப்பதிகார அடிகளால் கடல்கோளுக்குமுந்திப் பாண்டி நாட்டை வளப்படுத்திய அவ்வியாறு பின் கடல்கொள்ளப்பட்டொழிந்தது என்பது தேற்றம்.

இவ்வளவில் ஐயரவர்களின் பஃறுளிபற்றிய குறிப்பில் ஐயம் எதுவுமில்லை. ஆனால் குமரியாற்றின் தெற்கின்கண் ஓடியது பஃறுளி என அவர்கள் குறிப்பது சரியானால், குமரி தமிழகத்தின் தெற்கெல்லையென்பது பொருந்துமாறில்லை. குமரி தமிழகத் தென்கடையெல்லையாதலான், குமரிக்குத் தெற்கே பாண்டியனது பஃறுளியாறு ஓடிற்றாயின் அந்த யாறும் அது ஓடிய பாண்டியன் நிலமும் தமிழ்வரம்பறுத்த நல்லுலகத்தின் புறம்பேயிருந்தனவாகக் கொள்ளல்வேண்டும்.

'வடவேங்கடந்தென்குமரி—யாயிடைத்—தமிழ்கூறு நல்லுகத்து'
என்னும் தொல்காப்பியப் பாயிர அடிகள், பழந்தமிழ்நாட்டின் தெற்கின்கடைசியெல்லை குமரியென ஐயமறக் கூறுகின்றன.

குறுங்கோழியூர்கிழாரும் பண்டைத்தமிழகத்தின் வரம்பை,

'தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லை' (புறம்–17.)

என்னும் அடிகளாற் கூறலானும், குமரியே தமிழகத்தின் தெற்கெல்லையென்பது வலிபெறுகின்றது.

குமரி தெற்கின் கடைசியெல்லையாகவே தமிழ்நிலமனைத்தும் அதன் வடக்கிருத்தல் முறையாமன்றி யெனைத்தளவும் தமிழ் நிலப்பரப்பு, குமரியின் தெற்கேயிருந்ததெனக் கூறுதல் அமைவுடைத்தன்று.

பாண்டியநாட்டழிவுகுறிக்கும் சிலப்பதிகார அடிகள், 'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்து'த் தன் நிலப்பரப்பைக் குமரிக்கோட்டளவுங் கடல்கொள்ள அக்காலப் பாண்டியன் அதை இழந்தான் என விளக்குவதால், பஃறுளி பாண்டிநாட்டது என அறிகின்றோம்.

நெட்டிமையாரின் மேற்குறித்த புறப்பாட்டில் முந்நீர்விழவெடுத்த நிலந்தருதிருவினெடியோனாகிய வடிம்பலம்பநின்றபாண்டியனால் பஃறுளியாறு உண்டாக்கப்பெற்றசெய்தி,

'எங்கோ வாழிய குடுமி!
....
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே'. (புறம். 9.)

என்னும் அடிகளால் குறிக்கப்படுகின்றது. இதனாலும் பஃறுளியாறும், அவ்வாறு பாய்ந்த நிலப்பரப்பும் பாண்டிநாட்டின்பகுதியென்பது தேற்றமாகின்றது.

பாண்டிநாடு தமிழ்கூறுநல்லுலகென்பதில் ஐயமேற்படுதற்கில்லை. 'தமிழ்கூறுநல்லுலகின் நாற்பெயரெல்லைகளின் அகத்தது வண்புகழ்மூவர் தண்பொழில்வரைப்பு' எனத் தொல்காப்பியர் தம் செய்யுளியற்சூத்திரத்தில் (79) தெளியக்கூறுதலானும், தமிழகத்தின் அந்நாற்பெயரெல்லைகள் 'வடமலை, குமரி, கடலிரண்' டென்னக் குறுங்கோழியூர்கிழார் தம் புறப்பாட்டிற் கூறுதலானும், 'தமிழ்நிலைபெற்ற தாங்கருமரபிற்......செழியன்' என நத்தத்தனார் விளக்குதலானும், பாண்டியரின்

(பொதியிற்) 'குன்றமுண்டாகு மளவும்
தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்' (பூக்கும்)

எனப் பரிபாடலிற் கூறப்படுதலானும்,

'......தமிழ்நாடன்.........தென்னவன்
....
....
பொதியப் பொருப்பன்.........
.....................கோப்பாண்டியனே'

எனச் சேந்தனார் திவாகரத்தில் தெளிவிப்பதாலும், பாண்டியருடைய தமிழ்நாடுமுழுதும் தமிழ்கூறுநல்லுலகத்தின் தென்பகுதியாய்க் குமரியாகிய தமிழகத்தின் தென்பேரெல்லையினகத்து அடங்கியிருத்தல்வேண்டுமென்பது தேற்றமாகிறது.

குமரியெல்லையின் புறத்தததெதுவும் பாண்டியரின் தமிழ்நா டாகாது. இது மறுக்கொணுவுண்மையென்பது, சோழநாட்டின் தனிப்பெருந் தமிழ்ப்புலவராய்ச் சோழமன்னரால் சிறப்புப்பெற்று விளங்கிய கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் பாண்டியநாட்டையே தமிழ்நாடெனச் சுட்டும் குறிப்பாலும் துணியப்படும். தெற்கே சீதையைத் தேடச்செல்லுபவர்க்குக் கூறப்பட்ட எல்லைப்புற விவரங்களைக் குறிக்குங்கால் தென்னாட்டை நன்கறிந்த கிட்கிந்தை மன்னன்வாயால், கம்பர்,

'......................துறைகெழுநீர்ச் சோணாடு கடந்தாற் றொல்லை
பிறக்கமுற்ற மலைநாடு நாடியகன் தமிழ்நாட்டிற் பெயர்திர் மாதோ'
'தென்தமிழ்நாட் டகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கஞ் சேர்கிற்றீரேல்
என்றுமவ னுறைவிடமாம்............... ....காண்டீர்'

(கிட்கிந்தா. நாடவிட்டபடலம். 30. 31)

என்று கூறுகிறார்.

இச்செய்யுளடிகளில் சோணாட்டுக் கம்பர், சோழ சேர நாடுகளைத் தமிழ்த்தொடர்புகுறியாமல் வாளா சோணாடு மலைநாடு என அவ்வந்நாட்டுப்பெயராற் சுட்டுவதும், பாண்டிநாட்டைப் பாண்டி நாடென்னாமல் 'தமிழ்நாடு' 'தேன்தமிழ்நாடு' எனவே சுட்டுவதும், பாண்டிநாடு தமிழ்நாடென்றற்குச் சிறப்புரிமையுடையதென்பது தேர்ந்து தெளியப்பெற்ற செய்தி என்பதை வலியுறுத்தும்.

இனி, பஃறுளியாறு பாண்டிநாட்டின் தெற்கிலுள்ளதொரு பகுதிக்கு வடவெல்லையாக இருந்ததென்று வேனிற்காதையுரையில் அடியார்க்குநல்லார் கூறுதலான் அறிகின்றோம்.

"அவர் (—பாண்டியர்) நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்கும் இடையே எழுநூற்றுக்காவதவாறுங் கடல்கொண்டழிதலால், 'தொடியோள்நதியு' மென்றது, 'குமரியாகிய பௌவ' மென்றுரொன்றுணர்க" என்பது அடியார்க்குநல்லார் எழுதும் உரைக் குறிப்பாகும்.

இதில், பஃறுளியையும் குமரியையும் பாண்டியரின் கடல் கொண்ட தென்பாலிநிலத்தின் இருபேரெல்லையாக ஒரு சேரக் குறித்து, பஃறுளியை முதலூழியிறுதியிற் கடல்கொண்ட அவர் தம் தென்பாலிமுகத்தின் வடவெல்லையென விளக்கி, குமரியை இடம் குறியாது வாளா கூறியுள்ளார்.

இவ்வுரைக்குறிப்பிற் கூறப்படும் குமரி பஃறிளியாற்றுக்கு வடக்கோடிற்றோ? அன்றித் தெற்கோடிற்றோ? என்பது ஈண்டு ஆராய்ந்து துணியத்தகும்.

ஐயரவர்கள் தம் அரும்பதவகராதிக்குறிப்பில் 'பஃறுளி குமரிக்குத் தெற்கின்கண் ஓடியதோராறு' என வரைந்ததற்குத் தாம் கண்ட ஆதாரம் யாதென விளக்கினார்களில்லை. அவர்கள் கூறியாங்குக் குமரியின் தெற்கே பஃறுளி யிருந்ததாயின், தெற்கெல்லை பஃறுளியென்னுமல் அதன் வடக்கோடிய குமரியாற்றைக் கூறியது உண்மைக்கு முரணுவதை யெடுத்துக்காட்டி, அவர்கள் கொள்கைக்குரிய ஆதரவை விளக்கி என் ஐயமகற்றுமாறு அவர் களுக்கு யான் கடிதமெழுதி வேண்டினேன்.

வேனிற்காதையில் அடியார்க்குநல்லார் தரும் உரைக்குறிப்பையும் தம்மால் திட்டமாகச் சொல்லமுடியாத ஏதோ ஆதாரத்தையும் கொண்டு பஃறுளியைக் குமரிக்குத் தெற்கின்கண் உள்ளதாகத் தாம் அப்போது கருதியதாயும், ஆனால் அதன் உண்மை ஆராய்ந்து தெளியவேண்டியதொன்றாகுமெனவும் ஐயரவர்கள் எனக்கு அறிவித்தார்கள்.

அவர்கள் கருத்துக்குரிய பெருமதிப்பை நன்குணர்ந்த யான் பலவாறு அருவி இவ்விரு யாற்றினையும்பற்றிய பழஞ்செய்யுட்களின் குறிப்புக்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தேன். அக்குறிப்புக்களெல்லாம் பஃறுளியைக் குமரியின் தெற்குள்ளதாக யாண்டும் எனைத்தளவும் சுட்டுமாறில்லை. அதற்கு மாறாகக் குமரியின் வடக்கிருந்ததெனக் கொள்ளவைக்குங் குறிப்புக்களே காணப்படுகின்றன.

அடியார்க்குநல்லார்க்குக் காலத்தான் முந்திய சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர், 'பஃறுளியாறு குமரிப்பக்கத்ததோர் யாறு' எனக் கூறினரன்றிக் குமரிக்கு எப்பக்கத்தது எனக் குறித்தாரில்லை.

அடியார்க்குநல்லாரோ, 'பாண்டிநாட்டின் தென்பாலிமுகத்து வடவெல்லை பஃறுளி'யெனச் சுட்டி, அப்பஃறுளிக்கும் குமரியாற்றுக்குமிடையே எழுநூற்றுக்காவதவளவுள்ள பாண்டியரின் தமிழ்நாட்டுத் தென்பகுதி முதலூழியிறுதியிற் கடல்கொண்டழிந்தது: என்று கூறுகின்றார்.

முதலூழியில் புலவர் புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பிற் பாண்டியர் தமிழ்வளர்த்த தலைநகரம் கடல்கொள்ளப்பட்ட தென்மதுரை எனக் களவியலுரையில் நக்கீரரும், சிலப்பதிகாரவுரையில் அடியார்க்குநல்லாரும், மதுரைக்காஞ்சியில் மருதனரும் கூறுதலால், முதலூழியிறுதியிற் கடல்கொண்டழிந்தது தென்மதுரையுள்ளிட்ட பாண்டிநாட்டின் தென்பகுதியென்பது தேற்றமாகும். களவியலுரையைத் தழுவியே தாம் எழுதுவதாக அடியார்க்குநல்லாரும் சுட்டுகின்றார்.

இவ்விரு பெரும்புலவருரையாலும், பிற சில குறிப்புக்களாலும் அப்போது அழிந்த நாட்டினளவு எழுநூற்றுக்காவதமென்றும், அதன் வடக்கும் தெற்குமாகிய ஈரெல்லைகள் பஃறுளியும் குமரியும் என்றும் அறியலாம்.

பாண்டிநாட்டில் முதலூழியிறுதியில் அழிந்த தென்பாலிநிலத்தின் வடவெல்லை பஃறுளியெனவிளக்கும் அடியார்க்குநல்லார் குறிப்பில், குமரி தெற்கெல்லையென்று கூறப்படாவிடினும், அழிந்த நிலத்தின் மற்றோரெல்லையெனச் சுட்டப்பட்டுள்ளது.

பஃறுளியும் குமரியும் ஈரெல்லையாக இடைப்பட்டநாடு கடல்கொண்டதென்றும், அந்நிலத்தின் வடவெல்லை பஃறுளியென்றும் குறிக்கப்பெறுதலால், அதன் தெற்கெல்லை குமரியென்பது கூறாமலே தேறப்படுமன்றோ?

இதனால், அழிந்த தமிழ்நிலத்தின் வடவெல்லை பஃறுளியும் அதன் தெற்கெல்லை 'தடநீர்க்குமரி வடபெருங்கோடு'ம் என அடியார்க்குநல்லார் கருதினார் என்பது ஒருதலை. அடியார்க்குநல்லாரின் இக்கருத்து, தொல்காப்பியப் பாயிரம் தந்த பனம்பாரனார், குறுங்கோழியூர்கிழார், மாங்குடிமருதனார் முதலிய பழம் பெரும் புலவர்களும், இளம்பூரணர் முதலிய பேருரையாசிரியர்களும் குமரியைப் பண்டைத் தமிழ்நாட்டின் தெற்கெல்லையாகவே ஒருபடியாகக் கூறிய கொள்கையொடு பொருந்தியமையும் செவ்வியும் இங்குச் சிந்திக்கத்தக்கது.

குமரி தென்கடல்கொண்டழித்த பாண்டிநாட்டின் தென் கடையெல்லையாயின், அவ்வாறழிந்த நிலப்பரப்பைக் குமரிமுதல் பஃறுளியாற்றின்காறும் எனக் கூறுவதே முறையாமன்றி, வட பஃறுளிமுதல் தென்குமரியாற்றின் வடகரைவரை யெனக்கூறுதல் அமையாது; இளங்கோவடிகளும் அடியார்க்குநல்லாரும் பஃறுளியை முதலிற் கூறி, அவ்வாற்றுடன் குமரியளவும் கடல்கொண்டதெனவே சுட்டுதலால், பஃறுளி குமரியின் தெற்கோடியதெனக் கொள்ளுவதே பொருத்தமாகும் என வாதித்தல்கூடும். அவ்வாறு கொண்டால் பஃறுளிமுதல் குமரிவரையென்பதே அமையுமாதலின் 'தடநீர்க்குமரிவடபெருங்கோடு' என்பது பொருளற்ற கூற்றாகும். தெற்கிருந்துவந்தழிக்கும் கடல், குமரியின் தென்கரையைத் தொடாமல் வடக்கேமட்டும் அழித்துப்போதல் கருதொணாது. அன்றியும், குமரிக்கு வடகரைகூறுவதாயின் பஃறுளியின் தென்கோடுதொட்டுக் குமரியின் வடகோட்டளவும் எனக் கூறல்வேண்டும். அவ்வாறு கூறாமல் குமரிக்குமட்டும் வடகரை குறிக்கச் சிறந்தகாரணம் வேண்டும்.

குமரியே தெற்கெல்லையாய்ப் பஃறுளி அதன்·வடக்கே பாண்டியர்தம் தமிழ்நாட்டினிடையொழுகிய யாறுமேல்மட்டும், அடியார்க்குநல்லார் குமரியின் வடக்கெல்லையை அழிந்த தமிழ்நிலத்தின் ஓரெல்லையாகக்குறித்தது பொருத்தமாகும்.

குமரியாறே தமிழ்நாட்டின் தெற்கெல்லையாகவே, அதன் தெற்கே நாடிருத்தலும் அது தமிழ்நாடாகாமல் பிறநாடாதலும்

இன்றியமையாததாகும். யாறெதற்கும் இருகரையும் இருபுறநிலப் பரப்பும் இருத்தல்வேண்டும். ஒருபுறம் நிலமும் மற்றொருபக்கம் கடலுமாய் யாறொழுகல் கூடாமை வெளிப்படை.

குமரியின் தெற்கில் பிறநாடுண்மையால் அது தமிழ்நாட்டிற்கும் பிறநாட்டிற்கும் வரம்பறுக்கும் எல்லையாகக் கூறப்பட்டது என்பதை இளம்பூரணவடிகள் விளக்கியுள்ளார்.

"கடல்கொள்வதன்முன்பு (தமிழ்நாட்டிற்குத் தெற்கே) பிறநாடும் உண்மையின் தெற்கும் எல்லைகூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் (கடல்களேயன்றிப்) பிறநாடின்மையின் (எல்லை) கூறப்படாவாயின"* என்பதனால், கடல்கொண்ட தென்தமிழ்நாட்டிற்கும் அதன் தெற்கே முன் இருந்து அக்கடல்கோளால் அழிந்த பிறநாட்டிற்கும் இடையே அவற்றைப் பிரித்துநின்ற எல்லை குமரியாறு என்பது தெளியப்படுவதோடு, தமிழ்நிலம் அக்குமரியின் வடகரையளவே நின்றது என்பதும் விளக்கமாகும். எனவே, முதலூழியிறுதியில் அழிந்த தமிழ்நாட்டுப் பகுதியின் வடவெல்லை பஃறுளியென்பதும், அதன் தெற்கெல்லை குமரியாற்றின் வடகரையென்பதும் தெளிவாம்.

இவ்வழிவைக் குறிக்கும் சிலப்பதிகாரச்செய்யுளடிகள் அவற்றையாக்கிய இளங்கோவடிகளின் நோக்கத்தைச் செவ்விதிற் புலப்படுத்துநிற்கின்றன. அடியார்க்குநல்லாரும், அவருக்குப் பலநூற்றாண்டுகட்கு முன்பிருந்த இளங்கோவடிகளும் குறிப்பது, அவ்விருவருக்கும் பலப்பலநூற்றாண்டுகட்குமுன் கடல்கோளால் அழிந்தொழிந்த பாண்டியரின் தமிழ்நாட்டுப் பகுதியாகும். அவ்வாறழிந்த நிலத்தளவு கூறுதற்குப் பஃறுளியையும் குமரியையும் இரண்டெல்லையாக அவர் கொண்டனர். அவற்றுள் ஒன்றாகிய பஃறுளி அப்போதழிந்த பாண்டியரின் தென்பாலிநிலத்தின் வடவெல்லையாதலின், அதன் இருபுறமும் இருந்தது தமிழ்நாடேயாகும். குமரியாற்றிற்கோ அதன் வடக்கில் தமிழ்நாடும் தெற்கில் பிறநாடுமேயிருந்தன.

---

* இதில் இருபிறையடையாளங்களுக்கு உட்பட்டசொற்கள் அடிகளின் கருத்தைவிளக்க என்னால் கூட்டப்பட்டனவாகும். மற்றையவெல்லாம் இளம்பூரணவடிகள் கூற்று.

அழிந்ததன் வடக்கேயுள்ள பிற்காலத்தமிழ்நிலத்துப்புலவர், தெற்கே முன் அழிந்தநிலத்தைக் குறிக்குங்கால், தங்களுக்கு அணித்தாயிருந்த பஃறுளியைச் சுட்டி, 'அதுமுதல் அதன்தேற்கே தமிழ்நாட்டின் தென்கடையெல்லையாகிய குமரிவடகரைவரையிருந்த பழம்பாண்டிநாட்டின் தென்பகுதிநிலம் முதலூழியிறுதியிற் கடல்கோளால் அழிந்தது' எனக் குறிப்பது இயற்கையும் பொருத்தமுமாகும்.

குமரியின் வடகரையளவே பாண்டியரின் தமிழ்நாடும் அதன் தென்கரைதொட்டுப் பிறநாடும் இருந்ததனாலும், பிறநாட்டழிவளவுசுட்டுதல் அவர் செய்யுளில் வேண்டப்படாமையாலும், தமிழ்நாட்டின் அழிவொன்றே கூறவந்த அவ்விருபெரும் புலவரும் குமரியின் வடகரையை அப்போதழிந்த பாண்டித்தென்னிலப் பகுதிக்குத் தெற்கெல்லையாகச்சுட்டி, அமைவுபெறக் கூறினர் எனத் தெரிகின்றோம்.

இனி, குமரிமுனையிலிருந்து இம்மண்ணுலகின் தென்துருவமே ஏழாயிரமைலுக்குட்பட்டிருக்கக், கடல்கொண்ட தமிழ்நாட்டினளவுமட்டுமே எழுநூற்றுக்காவதமென்பது நகைக்கிடனாய் உண்மைக்கு மாறுபடுங் கூற்றாகுமெனத் தற்கால ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர்.

முதலூழியிறுதியில் கடல்கொண்ட தமிழ்நிலமே குமரி முனையையடுத்ததன்று. அதன் தெற்கே நெடுந்தூரத்திலிருந்து இரண்டாமூழியிறுதியிலழிந்த கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்ட தமிழ்நாட்டின் பரப்பிற்கும் தெற்கே, பஃறுளிமுதற் குமரிவரையிருந்த ஒருபகுதியே முதலூழியிறுதியிலழிந்ததென்பது தமிழ்ப்புலவர்கூறும் மரபு. ஆதலின், குமரிமுனைமுதற் பஃறுளிவரையிருந்த நிலத்தளவும், பஃறுளிமுதல் அதன்தெற்கே குமரிவரை யிருந்தழிந்த எழுநூற்றுக்காவதத் தமிழ்நிலத்தளவும், முதலிலழிந்த குமரியின்தெற்கேயிருந்தொழிந்த பிறநாட்டினளவும், அவையனைத்திற்கும் தெற்கே அவற்றைக் கொண்டழித்த தென் கடற்பரப்பளவும் கூட்டின், ஒரு எழுநூறோடு நில்லாது, எண்ணிறந்த பல எழுநூற்றுக் காவதங்கள் எண்ணல்வேண்டும். ஒரு

காவதத்தின் அளவு பத்துமைலாகக்கொண்டாலும், இவ்வளவு பலப்பல ஆயிரம் மைல்களாகுமாதலால், இந்நிலங்களெல்லாம் புலவர்படைத்துக்கூறும் புனைந்துரையாவதன்றி, உண்மையாதல் ஒல்லாதெனை ஆராய்ச்சியாளர் எடுத்துக்காட்டி நகைக்கின்றனர்.

இவ்வாறு கூறுபவர்கள் ஒருநிலத்தினளவு அதன் நீளத்தையும் அகலத்தையும் பெருக்கிய பரப்பளவாவதன்றி, அகலத்தை அறவே மறந்து நீளத்தின் தனியளவால் ஒருநிலத்தைக்குறித்தல் இயற்கையன்று என்பதை மறந்துபேசுவது வியப்பன்றோ! தமிழ் நாட்டில் எழுநூற்றுக்காவதம் அழிந்ததென்றால், அழிந்த அந்த நாட்டுக்கு அகலம் ஒன்றும் இல்லாமல் ஊசியவடையை விள்ள அதனூடு தோன்றும் இழைபோல ஏழாயிரம் மைல் நீளமட்டுமுள்ள நிலம் என்பது பொருளாமா? அழிந்தது ஒருநாடு எனவே, அது அகலமற்ற ஒரு நெடிய கோடு எனக் கொள்ளுதல் அமையாதாகலானும், நாட்டிற்கு நீளத்தோடு அகலமும் வேண்டப்படுமாதலானும், அவ்விரளவும் பெருக்கிய சதுரத்தளவே நிலத்தளவாமாதலானும், எழுநூற்றுக்காவதம் அல்லது ஏழாயிரம் சதுரமைல் பரப்பே முதற்கடல்கோளால் அழிந்த தமிழ்நிலப்பகுதியின் அளவு எனக் கொள்ளுதலில் வியப்பும் ஐயமும் எழுதற்கில்லை.

ஏறத்தாழ ஒரு ஜில்லா அளவுள்ள சேரர் மலைநாட்டின் ஒரு பகுதியான தற்காலத் திருவிதாங்கூர்வரைப்புமட்டுமே 6000-சதுரமைலாகிறது: என அறியும் நாம், சிலப்பதிகாரம் குறிக்கும் ஏழாயிரம் சதுரமைல் அளவுள்ள ஒரு தமிழ்நிலப்பகுதி முதலூழியிறுதியிற் கடல்கொள்ளப்பட்டு அழிந்ததுடன், அதன்பிறகே மீண்டும் மற்றொரு கடல்கோளால் முல்லைக்கலிகுறிக்கும் பாண்டியரின் இடையூழிக் கபாடபுரநிலப்பரப்பும் அழிவுற்றது என்பதில், அளவொன்றேகொண்டு அதனைமறுத்தற்குரிய தடையெதுவும் காணுதற்கில்லை.

முதலூழியில் கடல்கோளால் அளவறியாத பிறதென்னாட்டுடன் அழிந்த தமிழ்நிலப்பரப்பு, தெற்கே குமரியின் வடகரை முதல் அதன் வடக்கே பஃறுளியாற்றளவும் எழுநூற்றுக்காவதம் அல்லது ஏழாயிரம் சதுரமைல் அளவு என்பதும், அந்நிலத்தின்

கிழக்கும் மேற்கும் முன் கடல்களே எல்லையாயிருந்தன என்பதும், அழியுமுன் குமரிக்குத்தெற்கே தமிழ்வழங்காத பிறநாடே யிருந்த தென்பதும், அம்முதற் கடல்கோளால் அழிந்தவை அப் பிறநாடும் பாண்டியரின் தமிழ்நாட்டில் குமரிமுதல் பஃறுளிவரையுள்ள தென்பகுதிமட்டுமே யென்பதும், அடியார்க்குநல்லாருரையாலும் மற்றும் பழம்புலவர்கள்கூறும் செய்திகளாலும் ஒருங்கே தெளிந்து துணியப்படும் உண்மைகளாகும்.

முதலில் அழிந்தது பாண்டியர்நாடென்றது அவர்நாட்டுத் தென்பாலிமுகம் எனப்படுதலான், அது அக்காலப் பாண்டிநாட்டின் தென்பகுதிநிலத்தையே சுட்டுவது வெளிப்படை. அந்நில மிழந்த பாண்டியர் இரண்டாம் ஊழியில் அதன் வடக்குள்ளதாய் அழியாதெஞ்சிய தம் நாட்டுள், கபாடபுரத்தைத் தலைநகராக்கிக் கொண்டு அதிற் புலவரைக் கூட்டித் தமிழ்பேணும் தங்கள் அறமரபு போற்றிவந்தார் என்பது, நக்கீரர் களவியலுரையாலும், அடியார்க்குநல்லாருரைக்குறிப்பாலும் கூறப்படுகின்றது.

கபாடபுரமே பாண்டியரின் இடையூழித் தலைநகரமென்பது, மிகப் பழமை கூறப்படும் வடமொழியில் ஆதிகவியாகிய வான்மீகர், சீதையைத் தெற்கே தேடவிடுத்த தன் தானைத்தலைவருக்குச் சுக்கிரீவன் சுட்டிய எல்லைக்குறிப்பாக விளக்கும் வடமொழியிராமாயணப்பகுதியால் வலிபெறுகின்றது.

அசோகனுக்குமுன் பாடலிபுரத்தில் கி. மு. நான்காம் நூற்றண்டில் ஆண்ட சந்திரகுப்த சக்கரவர்த்தியின் அமைச்சனுகிய சாணக்கிய னியற்றிய அர்த்தசாஸ்திரத்தில் முத்தைக் கபாடகம் எனச் சுட்டும் குறிப்பாலும் இவ்வுண்மை தெளியப்படும்.

பொருள்களுக்கு அவையுண்டாகுமிடங்களால் பெயரமைவது இயல்பு. மாயூரத்தின் ஒருபகுதியாகிய கொருநாட்டில் நெய்யப்படும் சேலைகள் 'கொருநா'வெனப்படுதலும், இராயபுரியிற் செய்யப்படும் சருக்கரை 'இராயபுரி'யெனப்படுதலும், மாம்பழங்கள் 'சேலம்' 'பங்களூர்' என அவையவை உற்பத்தியாகும் ஊர்ப்பெயர் கொண்டு வழங்கப்படுதலும், இன்னபிறவும் இவ்வுண்மையை விளக்கும்.

பழங்காலத்துப் பாண்டியரின் தென்கடலொன்றிலன்றி யாண்டும் முத்துண்டானதில்லை என்பது உலகசரிதம் கூறும் உண்மையாகும். அப்பாண்டியரின் தலைநகரான கபாடபுரத்தி லிருந்து பாடலிபுரத்தில் வந்து விற்கப்பட்ட தமிழக் கடல்படு பொருளாகிய முத்துக்குக் கடற்றொடர்பேயில்லாத ஆரியரின் நடு நாட்டு வடமொழியில் முன் பேரில்லாமையால் அதைத் தங்கள் நாட்டுக்கு முதலில் அனுப்பிய பாண்டியரின் பேருராகிய கபாட புரத்தால் கபாடகம் எனப் பெயரிட்டது வெளிப்படை. பிறகு நாளடைவில் அதன் இயற்கைத் தமிழ்ப்பெயர் முத்து என அறிந்த பின் அப்பெயரைத் திரித்து முக்தா எனத் தங்கள் மொழியில் ஆரியர் பேரிட்டுக்கொண்டனர் என்பது, சாணக்கியன் நூலில் அப் பெயர் கூறப்படாமல் முத்தைக் கபாடகம் என்றே கூறுதலானும், சாணக்கியனுக்குப்பிற்கால நூல்களிற் காணப்படுவதுபோல அதற்குமுற்பட்ட வடமொழிநூல்களில் முக்தா எனும் பெயர் பெரு வழக்கில் காணப்படாமையானும் இவ்வுண்மை விளக்கமாகும்.

கபாடபுரமும் அதைச் சூழ்ந்த பாண்டிநாடும் இரண்டாமூழி யிறுதியில் மீண்டும் ஒரு கடல்கோளால் அழிந்ததென்பதும், அதன் பிறகே குமரிமுதல் சோணாட்டளவுள்ள தற்காலப் பாண்டிநாட்டை யமைத்து வையைக்கரையில் தமிழ்கெழுகூடல் எனும் மதுரை யைத் தலைநகராக்கிப் பாண்டியர் ஆண்டுவந்தனர் என்பதும், யாவ ரும் அறிந்த செய்தியாகும். இச்செய்தியே முற்காட்டிய முல்லைக் கலிப்பாட்டுக் குறிப்பதாகும்.

இதுகாறும் கூறியவற்றால், முதற்கடல்கோளுக்கு முன்னிருந்த பழந்தமிழ்நாட்டின் தெற்கெல்லை குமரியாறென்பதும், அக்குமரியே பிறதென்னாட்டைத் தமிழ்நாட்டிலிருந்து பிரித்த பேரெல்லையென்ப தும், பஃறுளிமுதலிய பிற தமிழ்நிலத்தடங்கிய பகுதியனைத்தும் அழிந்த குமரியாற்றின் வடக்கே யிருந்தனவேயாம் என்பதும், ஒருதலையாத் துணியப்படும் உண்மைகளாகும்.

ச. சோமசுந்தரபாரதி, M. A., B. L

அநுதாபக்குறிப்பு.

நிகழும் வெகுதானியஹு மாசிமீ 1உ ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்கு இம்மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவானும் சேற்றூர்ச் சமஸ்தான வித்துவானும் ஆன மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பரகதியடைந்ததுகுறித்து அநுதாபமடைகிறோம். இவர் பிரசித்திவாய்ந்த தமிழ்ப்புலவர்குலத்தில் உதித்தவர்; இக்காலத் தமிழ்ப்புலவர்களுள் மூத்தவராயிருந்தவர்; பலவகை நலனும் அமையப் பலப்பல புதிய வசனநூல்களையும் செய்யுணூல்களையும் இயற்றி அச்சிட்டளித்தவர்; பழையநூல்கள் பலவற்றை ஆராய்ந்து உரையெழுதிப் பதிப்பித்துதவியவர்; தமிழ்வேதமாகிய திருக்குறளை யாவரும் எளிதிற் படித்துணர்ந்து உய்யுமாறு இனிய வசனநூலாக்கியுபகரித்தவர்; இம்மதுரைத்தமிழ்ச்சங்கந்தோன்றிகாலத்தில் இதில் நூற்பரிசோதகராயிருந்தும் பரீக்ஷகராயிருந்தும் தமிழ்ப்பணி புரிந்தவர்; யாவராலும் நன்குமதிக்கப்பெற்றவர். இவரைப் பிரிந்து வருந்தும் சுற்றத்தார்க்கெல்லாம் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவரைப்பற்றி அறியவேண்டுவனவெல்லாம், இவருடன் நெருங்கிப்பழகியவரான வெள்ளகால் திருவாளர் ராவ்ஸாஹிப். வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்களால் எழுதப்பெற்று அடுத்துச் சேர்க்கப்பட்டுள்ள இவர் சரிதக் குறிப்புக்களால் நன்குவிளங்கும்.

நிகழும் வெகுதானியஹு மாசிமீ 27உ வெள்ளிக்கிழமை யிரவு 7 மணிக்கு மதுரைநகர்த் தனிகரும் உதாரசீலருமான திரவியம்பிள்ளையவர்கள் காலஞ்சென்றதுகுறித்து நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவர் திருநெல்வேலி இந்து கலாசாலைக்கு ஒரு லக்ஷரூபா நன்கொடையளித்ததுமன்றி, மேலும் பல வகையுதவிகளாலும் அது நெடிதுநிலவச் செய்தவர்; மதுரையில் 50,000 ரூபா செலவுசெய்து ஒரு பிரசவவைத்தியசாலையை நிறுவி, அது பிறநோயாளிகளுக்கும் வைத்தியவுதவியளிக்கும்படி போற்றி வந்தவர். மேலும் பத்திரிகைகளும் புத்தகங்களும் இலவசமாகப் பெற்றுப் படிக்கவிரும்புவார்க்கு உபயோகமாகும்படி ஆறுயிரம் ரூபாயில் நல்ல கட்டடமும் அருமையான புத்தகங்களும் அமைய, செல்லையா வாசகசாலையை அமைத்தும் அதற்கு ஐயாயிரரூபா மூலதனம்வைத்தும் அது என்றென்றும் நன்று நடைபெறவுதவியவர். இவ்வாறு மக்கள் அறிவுநலனும் உடல்நலனும் ஒருங்குபெற உபகரித்த இவருடைய ஆன்மா சாந்தியடைக.

சேற்றூர்ச்சமஸ்தானவித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்கவித்துவர்னு மான

மு. ரா. அருணசலக்கவிராயரவர்கள்

சிவபதமடைந்ததுகுறித்து

மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலையாசிரியர்

ஸ்ரீ. சு. நல்லசிவன்பிள்ளையவர்கள் இயற்றிய

இரங்கற்பாக்கள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*ஓரேழு புலவர்சத்த விருடியர்போ லொருகுடியி லொருகா லத்திற்
காரேழுபொழிமழைபோற்கவியின்மழைபொழியவராய்க்கலந்துவாழ்ந்தோர்
ஈரேழு புவியினிலுங் கண்டிலோ மெனப்புலவோ ரிசைக்கும் வண்ணம்
நீரேழு சூழுலகிற் கவிராஜ பரம்பரையி னிலவி வாழ்ந்தோய்.

சேற்றூரின் சமத்தானப் பெரும்புலவ னெனத்திகழ்ந்துஞ் செம்பொற் கூடல்
றூற்றேருந் தமிழ்ச்சங்கத் திருந்து பல தமிழ்நூல்கள் நுணுகியாய்ந்தும்
மாற்றேறு செம்பொனென மதிப்பேறப்பெறும் அருணசலப்பாவல்லோய்
காற்றேறு மூர்தியனைக் கனன்றநுதற் கண்ணன்றாள் கலந்திட் டாயோ.

வள்ளுவர்நூற்றெளிபொருளின்விளக்கமுங்கத்தியமுமிவண்வரைந்துதந்தும்
தெள்ளுதமிழ்ப் பாங்கிரியின் பிரபந்தத் திரட்டுடனே சிவநா சிப்பேர்
விள்ளுதலப் புராணமும்யாத் தினிதளித்து மூபர்பன்னூல்விழைந்துகற்போர்
உள்ளுதொறு முளங்கனியப் பொருளுரைத்து மிவணுறைந்த வொப்பி லானே.

பழம்புலவர் தங்களுளும் பழம்புலவ னெனநூற்றிற் பத்தி யாண்டு
முழங்குதிரைக் கடலுலகிற் குறைவயது மிகமுதிர்ந்து மூத்தியாக்கை
விழும்பருவத் தினுமுயற்சி வீழாம லுளத்தளர்ச்சி மேவுறாமற்
செழுங்கனிநேர் யமகமுடன் சிலேடையியற் றியும்பலநூல் செப்பஞ் செய்தும்.

---

* ஓரேழுபுலவர்—1. கந்தசாமிக்கவிராயர், 2. இராமசாமிக்கவிராயர், 3. பழனிக்குமாருத்தம்பிரான், 4. மீநாக்ஷிசுந்தரக்கவிராயர், 5. மு. ரா. அருணசலக்கவிராயர், 6. மு. ரா. சுப்பிரமணியக்கவிராயர், 7. மு ரா. கந்தசாமிக்கவிராயர் என்போர்.

குறிப்புரைகள் பன்னூற்கு வரைந்தெழுதா வெழுத்திலிட்டுங் கோதின் மக்கட்
பிறப்படைந்தார் பெறும்பயன்பெற் றனையருணை சலக்கவிஞ! பெரியாய்! முத்தி
யுறப்பெறுநா ளீதெனினும் நின்பிரிவின் கெமைவருத்து முலகில் யாவும்
இறப்பெறுதல் சாதமென வெண்ணிமனந் தேறலன்றி யியற்ற லென்னே.

மண்ணாட்டுப் புலவர்குழாத் தினிதுறைந்தா யிதுகாறு மண்ணோர் போற்றும்
விண்ணாட்டுப் புலவர்குழாத் தினியுறவோ வெம்மைவிட்டு விலகிச் சென்றாய்
பண்ணாட்டு பாவரசே யெமைப் பிரிந்தாய் நீயெனினும் பாரி னின்சீர்
உண்ணாட்டிப் பலபகலு முனைப்பிரியா வுளத்துடன்யா முறைகின் றோமே.

மின்னேரு மிவ்வுலக வாழ்க்கையினைத் துறந்துபெரு வீட்டை யெய்தித்
தன்னேரி லாப்பரமன் றாளடைந்த பெருந்தகையே! தமிழ்ப்பா வாணர்
எந்நேர நினைப்பரவும் பூதவுட லினைநீத்திங் கிறவா தென்றும்
நன்னேயப் புகழுடல நிறுவியநின் கடவுணிலை நாளும் வாழி.

நேரிசைவெண்பா.

வெகுதா னியவருடம் மேவுகும்ப மாதம்
தகுதேதி யொன்றிரவி தன்னாள்—நகுமதிதேய்
பக்கநவ மித்திதியிற் பார்புகழ்வீ டுற்றனன்சீர்
மிக்கவரு ணாசலப்பா வேந்து.

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவானும் ஆன

மு. ரா. அருணாசலக்கவிராயர்

1852 — 1939

[ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியார், G.B.V.C.]

இவர் 1939 பிப்பிரவரி 12-ம் தேதி பரமபதமடைந்தார்; இக் காலத்துத் தமிழ்வித்துவான்கள் எல்லாரினும் முதியவராயிருந் தவர். இவர் காலஞ்சென்றபோது, இவர்க்கு வயது 87.

பூர்வ வாசத்தலமும் முன்னோரும்.

இவர் குடும்பம், முன் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து இப் போது இராமநாதபுரம் ஜில்லாவிலிருக்கிற சேற்றூர் ஜமீன் தலைமை யூரான சேற்றூருக்கு அருகேயுள்ள முகவூரில் வாழ்ந்துவந்தது. இவர் தந்தை இராமசாமிக்கவிராயரும் பெரிய தந்தை கந்தசாமிக் கவிராயரும் சேற்றூர்ஜமீன் சமஸ்தான வித்துவான்களாயிருந் தனர்.

இவர் குடும்பத்தார்.

இவர் பெரியதந்தை கந்தசாமிக்கவிராயருக்குப் பழனிக் குமாரத்தம்பிரான் (திருவாவடுதுறையாதீனத்தைச் சேர்ந்தவர்), மீனாட்சிசுந்தரக்கவிராயர் (எட்டயபுரம் சமஸ்தான வித்துவானா யிருந்தவர்) என்ற இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இவர் தந்தை இராமசாமிக்கவிராயர்குமாரர், இவரும், மு. ரா. சுப்பிர மணியக்கவிராயரும், மு. ரா. கந்தசாமிக்கவிராயருமாவர். இம் மூவரும் சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்களாயிருந்ததோடு மதுரைத்தமிழ்ச்சங்கத்து வித்துவான்களாகவும் விளங்கியவர்கள். இவர்களோடு இவர் குடும்பத்தைச்சேர்ந்த மேலேகுறித்த நால்வ ரும் பெயர்மாத்திரமாகவன்றி உண்மையாகவும் கவிராயர்களாய்க் கவிவன்மையால் பேரும் பிரசித்தியும் பெற்றவர்கள்.

ஒரு குடும்பத்தில் ஒரேகாலத்தில் ஒருங்கு விளங்கிய எழுகவிஞர்கள்.

இவ்வாறாக, இவருள்பட எழுகவிஞர்கள் ஒரு குடும்பத்தில் ஒரேகாலத்தில் ஒற்றுமையுடன் இனிதுவாழ்ந்ததைக் கண்டு உலகத்தார் உவப்பும் வியப்பும் ஒருங்குற்றதை, யான்கூறிய பின்வரும் சிறப்புப்பாயிரக்கவிகள் விளக்குவனவாம்.

மைந்தரொடு மாதர்புனை செழுங்களபச் சேந்சேறும் வனைபூமாலை
சிந்துமது நீர்துதிரை விலாழிநீர் கரிமதநீர் செல்வர் தம்பால்
வந்தஇர வலர்க்குதவு பொருளொடுவார்ந் திடுநீரால் வாய்ந்த சேறும்
எந்தவயி னுஞ்செறிந்து சேற்றூரென் றிசைந்தும்இசை யிசைந்த தோநர்.*

அவ்வூரான் தோற்றவர்கள் பற்பலரும் அவ்வூருக் கருகர் மேவி
எவ்வூரா யினுநிகராப் பெருவனப்பால் முகவூரென் றியைந்த நாமச்
செவ்வூரா நன்னிலத்தில் வரிசையெரு விட்டுநிதிச் செய்ய தோயங்
குவ்வூராப் பாய்வித்து வளர்த்தவொரு பெரியகவி துலதா நப்பால்†

கந்தசா மிப்பெயரும் இராமசா மிப்பெயருங் கவினப் பூண்டு
வந்த இருபணை முனதிற் கிளைத்தகிளை, பழனிக்கு மாரசாமி
நந்துமீ னுட்சிசுந்த ரம்பிளைதிற் கிளைத்தகிளை, நலமி குந்த
சந்தவரு ணாசலஞ்சுப் பிரமணிய னெடுகந்த சாமி யாலோ.§

இருவிணினை ரிடைச்சுத்த விருடிகண மீனிலங்க லென்ன மண்ணிற்
பெருதபுக் ழெழுபுலவ ரொருகுடியி லொருங்குமிகப் பிறங்கி னூரல்.‡

கல்விப்பயிற்சி.

இவர் திருவாவடுதுறையாதீனத்தில் சின்னப்பட்டம் வகித்திருந்த ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தேசிகமூர்த்திகளின் மாணாக்கராய் இலக்கிய இலக்கண நூல்கள் பலவும் பயின்று சிறந்த வித்துவானவர். 'குலவித்தை கல்லாது பாகம்படும்' என்றவாறு கல்வி பயிலுங்காலத்திலேயே கவிகளியற்றும் வல்லமைபெற்றிருந்தார்.

---

* புனைகளபம் - (புதுக்கலவைச் சாந்து அணிதற்காக, வழித்தெறிந்த, முன்) அணிந்திருந்த கலவைச் சாந்து. வயின் - இடம். இசை - கீர்த்தி.

† தோயம் கு ஊராப் பாய்வித்து - நீரைப் பூமியில் ஊர்ந்து பாயச் செய்து.

§ சேறைத் தவம்பெற்றநாயகிபிள்ளைத்தமிழ்ச் சிறப்புப்பாயிரம்.

‡ பரங்கிரிப் பிரபந்தத்திரட்டுச் சிறப்புப்பாயிரம்.

வாழ்ந்த தலங்கள்.

இவர் பாலப்பருவத்தில் முகவூரிலும், உயர்தரக்கல்விப் பயிற்சிக்காலத்தில் திருவாவடுதுறையிலும், யௌவனகாலத்தில் சிவகாசியிலும், வயோதிககாலத்தின் முற்பகுதியில் இவர் தம்பி மு. ரா. கந்தசாமிக்கவிராயர்சம்ரட்சணையில் மதுரையிலும், நடுப் பகுதியில் தனியே திருப்பரங்குன்றத்திலும் தள்ளாமை மிகுந்த இறுதிப்பகுதியில் தம் தௌகித்திரர் திரு. S. அருணாசலம்பிள்ளை (Mail-sorter, R. M. S.) ஆதரவில் மதுரையிலும் வாழ்ந்திருந் தார்.

பழகிய வித்துவான்கள்.

இவர் நெருங்கிப் பழகிய வித்துவான்கள், இவர் தந்தைமுறை யிலும் சகோதரமுறையிலும் இருந்த ஆறுகவிஞர்களுமல்லாமல், திருநெல்வேலிக் கவிராய நெல்லையப்பபிள்ளை, அழகியசொக்கநாத பிள்ளை ஆகிய இருவரும், சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார், குன்னூர்க் குமாரசாமிமுதலியார், சோழவந்தான் அரசஞ்சண் முகனார் முதலியோருமாவர்.

இவர் இயற்றிய செய்யுள் நூல்கள்.

பதிப்புவருடம்.	நூற்பெயர்.	பாட்டெண்.
விஷு	சிவகாசித்தலபுராணம்.	1039
1891	சிவகாசிப் பதிற்றுப்பத்தந்தாதி	100
1898	யாழ்ப்பாணத்துநல்லூர் ஆறுமுகநாவலர்சரித்திரம்.	361
1902	சிவகாசிக் கலிவிருத்த அந்தாதி	.100
1902	சிவகாசி வெண்பா வந்தாதி மூலமும் உரையும்	100
1906	சேது பர்வதவர்த்தனியம்மை பிள்ளைத்தமிழ்	100
1907	சேறை (சேற்றூர்)த் தவம்பெற்றநாயகி பிள்ளைத்தமிழ்	100
	திருப்பரங்கிரிப்பிள்ளைத்தமிழ்	100
1927	பரங்கிரிப்பிரபந்தத்திரட்டு குறிப்புரையுடன்	

	பாங்கிரிப்பாமாலை	102	1208
	,, கலித்துறையந்தாதி	101	
	,, பதிற்றுப்பத்தந்தாதி	101	
	,, வெண்பாவந்தாதி	101	
	,, அலங்காரம்	201	
	,, மும்மணிக்கோவை	31	
	,, அநுபூதி	52	
	,, கோவை	519	
1927	ஒற்றைக்கடை விநாயகரந்தாதி		100
	,, ,, இரட்டைமணிமாலை		20
	,, ,, மும்மணிக்கோவை		30
	பாட்டுமொத்தம்		3358

தனிப்பாட்டுக்கள் எண்ணிறந்தவை.

இவர் இயற்றிய வசன நூல்கள்.

		பக்கம்
1913	திருக்குறள்வசனம்	264
விகாரி	திருப்பரங்கிரிப்புராணவசனம்	90
விகாரி	திருச்செந்தூர்த்தலபுராணவசனம்	142
1924	திருக்குறள்திரட்டும் தெளிபொருள்வசனமும்	328
1930	திருக்குறள்மூலமும் தெளிபொருள்வசனமும்	437

இவர் பதிப்பித்த நூல்கள்.

1914	வேணுவனத்தலபுராணம் குறிப்புரையுடன்
,,	காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் குறிப்புரையுடன்
,,	நெல்லைவருக்கக்கோவை
	திருச்செந்தூர்ப்பிரபந்தத்திரட்டு குறிப்புரையுடன்
சாதாரண	திருக்குற்றாலத் தலபுராணம் (2-ம்பதிப்பு) குறிப்புரையுடன்
1912	திருக்குற்றாலக்குறவஞ்சி குறிப்புரையுடன் — முதற் பதிப்பு
1927	திருக்குற்றாலக்குறவஞ்சி குறிப்புரையுடன் — 2-ஆம் பதிப்பு

இவர் உரைகளும் வசனநூல்களும் எளிதும் தெளிவு மானவை.

இவர் இயற்றியனவும் பதிப்பித்தவையுமான நூல்கள், நிறைந்த கல்விமான்களுக்கன்றிக் குறைந்த படிப்பாளிகளுக்கும் பயன்படவேண்டுமென்றெண்ணி, மிக எளிய தெளிவான வசனப்பகுதிகள் சேர்க்கப்பெற்றனவாய்த் 'தாமின்புறுவ துலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந் தார்' என்றவாறும், 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்றவாறும் இவர் உலகத்துக்குச் செய்த நல்லுபகாரமாயுள்ளனவாம்.

தமிழ்மொழியில் (என்பானேன், உலகமொழிகளெல்லா வற்றிலுமே) முதன்மையான நூலாகிய திருக்குறள்மூலமன்றி, அந் நூலின் உரைகளுட் சிறந்த பரிமேலழகருரையும், ஆசிரியருதவி யின்றி மாணாக்கர் கற்கமுடியாதவை. அந்தநூலை ஆசிரியர் துணை வேண்டாமல் குறைந்த கல்வியுடையாரும் எளிதாகக் கற்றுக் கொள்ளும்படி திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும் என்ற பெயருடன் இவர் வெளியிட்டிருப்பது மேற்கூறிய நல்லுபகாரத் துக்குச் சிறந்த உதாரணமாம். இவர் பதிப்பித்த நூல்களிற் பெரும் பான்மையானவைகளை யாரும் எளிதாகக் கற்கும்படியாக இவர் வசனமெழுதிச் சேர்த்துப் பதிப்பித்திருக்கும் உபகாரம், மேலே யுள்ள இவர் பதிப்பித்த நூல்கள் என்ற தலைப்பின்கீழ் உள்ள நூல் களால் விளங்கும்.

குணநலன்.

இவர், அழுத்தமான தன்மதிப்புடையவர்: பாட்டுப்பாடி வறுமையினால் பரிசுபெறலை மேற்கொண்டாரல்லராயினும், தம்மைச் சகோதரர்போலப் பாவியாத எந்தக் கொடையாளரிடமும் அணுகா திருந்தார். இவர் சிறிதுகாலமே மதுரைத்தமிழ்ச்சங்கக் காரி யாலயத்தில் அச் சங்கவித்துவான்களுள் ஒருவராய் வேலைபார்த் ததேயன்றி வேறெங்கும் மாதச்சம்பளம்பெறும் வேலையில் அமர வில்லை. யாதாயினும் ஒரு கலாசாலையில் தமிழ்ப்பண்டிதராவதற்கு முயலலாமென்று நான் இவரிடம் சொல்லியபோது, உத்தியோகங் களுக்குரிய நிர்ப்பந்தங்களுக்குள்ளாவதற்குத் தம்மனம் ஒப்ப வில்லை யென்று சொல்லிவிட்டார். இவர் திருப்பரங்குன்றத்தி லிருந்தபோது நான் இவரைப் பார்க்கப்போயிருந்த ஒரு சமயத்தில் திருவாவடுதுறை ஆதீனவித்துவானும் அங்கே கல்விபயிலும்

மாணவருக்குக் கற்பிக்கவேண்டுமென்றும் தனித்த ஜாகை, தனித்த சமையல் முதலிய சௌகரியங்களுக்கு வேண்டும் ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு தக்க மாதச்சம்பளமும் தரப்படுமென்றும் காலநிபந்தனை முதலிய எவ்வகை நிபந்தனைகளுமில்லாமல் பாடஞ் சொல்லிவைக்கலாமென்றும், அந்தப் போதகவேலை இவர் தம்பியார் சுப்பிரமணியக்கவிராயர் பார்த்த வேலையென்பதை ஞாபகப்படுத்தியும் பண்டாரசன்னிதி அனுப்பிய திருமுகம் வந்திருப்பதாக என்னிடம் சொன்னார். நான் அந்த வேலை நிர்ப்பந்தமானதன்றென்றும் ஏற்றுக்கொள்ளலாமென்றும் சொன்னேன். நிர்ப்பந்தம் சிறிதேனுமில்லாத சேவகமேயில்லை யென்று என்னிடம் சொல்லி அந்த வேலையை ஏற்றுக்கொள்ள இயலவில்லையென்று மேற்குறித்த திருமுகத்துக்கு விடையனுப்பிவிட்டார்.

பழகியகாலமும் சில நிகழ்ச்சிகளும்.

இவருடன் இரண்டுதலைமுறைக்காலத்துக்குமேலாகப் பழகியிருக்கிறேன். எனக்கு உண்மையன்புள்ளாருட் சிறந்த ஒருவராயிருந்தார். யான் முதன்முதலியற்றிய நூலான நெல்லைச்சிலேடைவெண்பாவைச் சிரத்தையொடு பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்தார். எனது பிந்திய நூல்களுட் பல, இவரால் திருத்தப்பெற்றவை. இவர் தம்முடைய நூல்களுட் பெரும்பான்மையானவைகளை எனக்குப் படித்துக்காட்டியும் தபால்வாயிலாக அனுப்பியும் எனக்குத்தோன்றிய குறிப்புக்களை யேற்றிருந்தார்.

கம்பராமாயணசாரம் முதலைந்து காண்டங்களிலுள்ள இனிய கவிகளை ஆராய்ந்துதேர்ந்தெடுத்தற்கு, அவ்வைந்து காண்டங்களையும் என்னுடன் இருந்து படித்து உதவிசெய்தார். தேர்ந்தெடுத்துத் திரட்டிய கவிகளடங்கிய, இவர் கைப்பட எழுதிய பிரதி என்னிடமிருக்கிறது. இவர் இடையிடையே என் ஊர்க்குவந்து சில மாதங்கள் என்னுடனிருந்து நூல்களைப் படித்து உவப்புறுதலும், நான் இவர் இருந்த திருப்பரங்குன்றத்துக்குச் சென்று சில தினங்கள் இவருடனிருந்து அவ்வாறு செய்தலும் வழக்கம். வருடாந்தர மாட்டுச்சந்தைகள் கூடுமிடங்களில் யான் உத்தியோகமுறையில் சிலவாரங்கள் தங்கும்படி நேர்ந்தசமயங்களில் இவர் வந்து என்னுடனிருந்து வித்தியாகாலட்சேபஞ்செய்வதும் வழக்கம்.

பின்வரும் என்பாட்டில் இவர் என் சீமந்த அழைப்புப் பத்திரிகையைப் பெற்றபோது, சிவகாசியிலிருந்து எனக்கெழுதியதும் அதற்கு நான் திருநெல்வேலியிலிருந்து பதில் எழுதியதும் தெரியலாம்.

"சீமந்த முனக்கேனெனக்கண் டுவகைமிக எமைமறந்த செயலி னாலே
நாமந்த முகூர்த்தம்வர விலை"யென்றாய் கற்பனையே நாலந் தோட்டம்
போமென்றாய்த் தவனிருப்ப,நீயுறின், மீண் டுங்கோடும் புவியென் றுன்னி,
மாமன்று ளாடிதடுத் தமையின்வர வில்லை. இது வாய்மை யாமால்.

இவர் தம் குமாரனுக்குக் கல்யாணம் செய்விக்கும்படி சொல்லியவர்களிடம், அதைச் செய்யாமைக்கு இவை காரணங்களென இவர் கூறியது, கல்யாணம் முடிந்தபோது நான் இவருக்கெழுதி விடுத்த அடியிற்குறித்த பாட்டினால் அறியத்தக்கது.

'தன்புத்தி எந்துசம் பாதனத் செய்திடும் சத்திவந்து
பின்புத்தி யோகமும் வந்தபின் செய்விப்பன் பெட்குமணம்
என்புத்தி ரற்கேன் றவைவந்த பின்பஃ தியற்றுவித்தாய்
அன்புத்தி பத்தி னருணு சலநின் னறிவுநன்றே.

இவர் வைத்தியச்செலவுக்காக நான் அனுப்பிய இருபத்தைந்துரூபாய் மணியார்டரைப்பெற்றபோது எழுதியதும் என்னைக்குறித்து இவர் இறுதியாக இயற்றியது(ம் இவரது கடைசிக் கவியென்று கருதக்கூடியது)மான வெண்பாவை இதனடியில் தந்து இவ்வரலாற்றுக்குறிப்பை முடிக்கின்றேன்.

தனக்குரிய பத்துத் திருநாமங்களுள் 'வீபற்சு' என்பதை ஒரு நாமமாகக்கொண்ட அருச்சுனனுக்குத் தமையனான வீமனுக்குத் தமையனான தருமனுக்குத் தமையனும், ஒவ்வொருநாளும் உதயந் தொட்டு நண்பகல்மட்டுமுள்ள கால்நாளைத் தான் கொடை கொடுக்குங் காலவரையறையாகக் கொண்டவனுமான கர்ணனுக்கு, 'நீ எனக்குக் கால் நூறு கொடுத்ததனால், ஒப்பாவாய்' என்ற குறிப்புப்பொருளைக்கொண்ட அந்த வெண்பா வருமாறு:

நானூறு நீங்குமா நாடிநீ நன்களித்த
கானூறும் பெற்றுக் களிப்புற்றேன்—தேனூறு
சொற்சுப் பிரமணிய துங்கா துதிமிதும்வீ
பற்குமுன்முன் முன்போல் பவா.

மதிப்புரை.

சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழகராதியின் முதற்றொகுதியில் முதற் பகுதி:—இது, மொழிநூலாராய்ச்சியாளர் ரேவரேண்டு S. ஞானப்பிரகாசரவர்களால், தமிழ்மொழிகளை ஆராய்ந்து சொற்பிறப்புக்கட்டளைகளைக் காட்டி அக்கட்டளைப்படி திரிவுபெற்றுவரும் தமிழ்ச்சொற்றொகுதிகளுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் அகராதிமுறையே பொருளெழுதத்தொடங்கி, அ முதல் அட்டம் அளவுள்ள சொற்களுக்குப் பொருளெழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. வேண்டியவற்றுக்கு மேற்கோள்களும் காட்டப்பட்டுள்ளன. இதனுள் சொற்களின் முதலடிதிரிந்து பொருள்வேறுபடுமாறும், ஒலித்திரிபு, உருத்திரிபு, பொருட்டிருபுகளால் பொருள்வேறுபடுமாறும் காட்டப்பட்டுள்ளன. அவையெல்லாம் பலமொழிகளினும் பயிற்சியுடையாரால் ஆராயத்தக்கன. இது முற்றுப்பெற்றால் தமிழினும் மொழிநூல் உண்டென்று கொண்டாடத்தக்கதாகும். எந்தத்துறையிலும் புதிய முறைகளைக் கண்டு வெளியிடுபவர்களுடைய நன்முயற்சி முதன்முறையிலேயே முற்றும் திருத்தமடைந்துவிடுமென்று சொல்லமுடியாது; ஆயினும், முயல்பவர்களின் பரிச்சிரமத்தைப் பார்க்கும்போது மிகவும் அருமைபாராட்டத்தக்கதே, இதன்விலை ரூபா. இரண்டு. வேண்டுவோர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையிற் பெறலாம்.

மாயா விநோதினி:—இது, புலவர்திலகமான ரவீந்திரநாததாகூர் அவர்களால் வங்காளிபாஷையில் எழுதி வெளியிடப்பட்ட சோகேர்பாலி என்ற அரிய நாவலின் தமிழ்மொழிபெயர்ப்பாகும். ரவீந்திரரின் கதையமைப்பும் கற்பனையும் கதாபாத்திரங்களின் ஒழுக்க வழக்கங்களால் அவர் புலப்படுத்தும் நீதிகளும், கதாபாத்திரங்களின் மனத்தினுள் அவர் புகுந்து செய்யும் விளையாட்டுக்களும்

நுணுகிநுணுகி யறிந்து இன்புறத்தக்கன. இத்தகைச் சிறப்பு வாய்ந்த அவருடைய நூல்களை மொழிபெயர்ப்பதென்பது எளிதிற் செய்யத்தக்கதொன்றன்று. இம் மாயாவிநோதினி மொழிபெயர்ப் பாய்த் தோன்றாமல் முதனூலின் நயமெலாம் ஒருங்குகொண்டு விளங்குகிறது. இதனை எளிய தமிழ்நடையில் அழகுற மொழி பெயர்த்துதவிய ஸ்ரீமதி. தஞ்சம் அவர்களின் மதிநுட்பம் நன்குமதிக்கத்தக்கது. இது சென்னையிலிருந்து மாதந்தோறும் வெளிவரும் கலைமகள் என்ற சிறந்த தமிழ்ப்பத்திரிகையில் சிறிது சிறிதாக வெளியிடப்பட்டுவந்து இப்போது தனிப்புத்தகமாகவும் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இடையிடையே சித்திரபத்திரங்க ளுடன் கிரௌன் பதினாறுபக்க அளவில் 360 பக்கங்கொண்ட இதன்விலை ரூபா 1—8—0. வேண்டுவோர், 'மானேஜர், கலைமகள், மயிலாப்பூர்' என்ற விலாசத்திற் பெறலாம்.

தமிழகராதி (TAMIL LEXICON) அனுபந்தம் முதற்பகுதி:— இது, சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டு முற்றுப்பெற்ற தமிழகராதியின் அனுபந்தமாய் அவ்வகராதியில் வாராத பல சொற் களையும் பொருள்களையும் அவ்வகராதியிற் கண்டமுறையே கொண்டு விளக்குவது; அ முதல் ஊனேறி இறுதியாகவுள்ள சொற் களையுடையது; வழக்கப்படி நல்லகாகிதத்தில் திருத்தமும் அழ கும் அமைய அச்சிட்டு வெளியிடப்பட்டது; நூற்றறுபதுபக்கம் உடையது. இதன் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர், 'M. R. அப்பாதுரையவர்கள், 57, ஆண்டர்ஸன்பேட்டை, ஜியார்ஜ்டவுண், சென்னை' என்ற விலாசத்திற் பெறலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1938-ஆம் வருஷ ஜனவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1938 ஜனவரி	வரவு 1937 ஜனவரி	விவரம்	செலவு 1938 ஜனவரி	செலவு 1937 ஜனவரி
I General Section :			I General Section :		
(1) மாதசந்தாவகையில் அடியிற்கண்டபடி வரவு:— (a) புதுக்கோட்டை ஸ்டேட்டிலிருந்து 1938-ம் வருஷ ஜனவரி மாதச்சந்தா வரவு ரூ 50 (b) மகா-ள-ள-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களிடமிருந்து சங்கக்கலாசாலை மாணவர் போஷணை வகைக்கு 1937-ம் வருஷ ஜூலை மாதச் சந்தா வரவு ரூ 10 ஆக ரூ 60	60		(1) சங்கம்மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	173	
			(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	130 5 2	
			(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	78 8 ...	

(2 பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டி வகையில் வரவு ...	393	5	1			
(3) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகக் கட்டணத்தொகை வரவு ...	328	4	...			
(4) சங்கக் காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	.			
(5) Miscellaneous வரவு ...	2	8	..			
மொத்தம் ரூ ...	814	1	1	920	6	...

(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	5	1	...			
(5) சங்க புத்தகசாலைக்குவரும பத்திரிகைக்குச் சந்தா செல்லாகியது	6	9	...			
(6) சங்கக்கட்டிட சில்லறை மராமத்துவகையிற் செலவு ...	5	15	...			
(7) தபால், தந்தி வகையிற்செலவு	1	...	...			
(8) சங்கமாரீசு சில்லறைவேலைகள சம்பந்தமாக அச்சுக் கூலி பைண்டிங்கூலிவகையிற் செலவு.	4	...	...			
(9) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு. ...	11	...	..			
மொத்தம ரூ	415	6	2	681	13	6

II Editorial Section :						
(1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவகையில் வரவு ...	6	...	...			
(2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச சந்தாவகையில் வரவு ...	20	...	.			
(3) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ..	36	13	6			
மொத்தம் ரூ ..	62	13	6	89	2	...
III Press Section :						
(1) சங்கவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலிவகையில் வரவு.	84	...	...			
(2) ஷை வேலைகள் சம்பந்தமாக பைண்டிங்கூலிவகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	87	...	...	77	8	...

II Editorial Section:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம செல்லாக்கியது ...	83	13	11			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிமெசம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன் வழிவகையிற் செலவு. ...	10	10	6			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு.	83	...	..			
(4) தபால் தீர்வைவகையிற் செலவு	6	...	...			
மொத்தம் ரூ ...	183	8	5	326	11	...
III Press Section :						
(1) அச்சாபீஸ்சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	69	12	10			
(2) ஷை ஆபீஸ் Stationery Contingencies வகையிற் செலவு.	3	4	8			
மொத்தம் ரூ ...	73	1	6	98	4	3

ஆகமொத்தம் வரவு ரூ. ...	963	14	7	1087	...	...	ஆக மொத்தம் செலவு ரூ.	672	...	1	1106	12	9
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ. ...	167	5	8	706	6	11	மாதமுடிவில் மீதியிருப்பு ரூ. ...	*459	2	2	686	10	2
ஆகமொத்தம் ரூ. ...	1131	2	3	1793	6	11	ஆக மொத்தம் ரூ. ...	1131	2	3	1793	6	11

*By M. R. C. C Bank Pass Bk. in current account Rs. 50- 0- 0
Amounts under suspense account as per vouchers from staff 106- 8- 0
Cash on hand Rs. 302-10- 2

459- 2- 2

குறிப்பு:—மேலேகண்ட விபரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ. 459—2—2 தவிர, ஆபீஸ் மூலதனங்களாக உள்ளவை:—மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்கான Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011-5-0. (2) ரூ. 1050. (3) ரூ. 1001; மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்கான Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000. (2) ரூ. 10000; (3) ரூ. 5000, காரைக்குடி மகா-ள-ள-ஸ்ரீ ஸ. அப. ஏம. நாராயணன்செட்டியாரவர்களின் கம்பெனி அடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1200 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 8—2—'38

LAKSHMINARAYANAN,
MANAGER, 8—2—'38.

1938-ஆம் வருஷம் பிப்ரவரிமாத வரவு செலவு கணக்கு.

விவரம்.	வரவு 1938 பிப்ரவரி			வரவு 1937 பிப்ரவரி		
I GENERAL SECTION:						
(1) மகா-ள-ள-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் B. A, B. L. அவர்களிடமிருந்து சங்கப்பதிப்புப்புத்தகம் அச்சிடக் காகிதம் வாங்குவதற்காக நன்கொடைவரவு ...	[illegible]	8	...			
(2) மாதச்சந்தாவகையில் அடியிற்கண்டபடி வரவு: —						
a. புதுக்கோட்டை ஸ்டேட்டிலிருந்து 1938-ஆம் வருஷம் பிப்ரவரி மாதச்சந்தா ரூ 50						
b. மகா-ள-ள-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களிடமிருந்து சங்கக்கலாசாலை மாணவர்						

விவரம்	செலவு 1938 பிப்ரவரி			செலவு 1937 பிப்ரவரி		
I GENERAL SECTION:						
(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகளுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	172	8	...			
(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் செல்லாக்கியது ...	180	...	...			
(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	79	10	10			
(4) Stationery contingencies வகையிற்செலவு ...	3	1	3			

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
போஷணை வகைக்கு 1937-ஆம் ௵ ஆகஸ்டு செப்டம்பர் மாதங்களுக்குச் ச்சந்தாவரவு ரூ. 20						
ஆக ரூ 70	70	...	...			
(3) பாங்கில் போடப்பட்டுள்ள தொகைக்கு வட்டிவகையில் வரவு ...	437	10	9			
(4) சங்கப்பரீக்ஷைக் கட்டணத் தொகை வரவு ...	22	...	...			
(5) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	...			
(6) Miscellaneous வரவு ...	..	7	..			
மொத்தம் ரூ ...	563	9	9	529	10	9
II EDITORIAL SECTION:						
(1) செந்தமிழ்ப்பத்திரிகைக்குச் சந்தாவகையில் வரவு ...	8	8	...			

	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
(5) சங்கமாபீசு சில்லறைவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி ஸ்பண்டிங்கூலிவகையிற் செலவு.	27	8	...			
(6) சங்கப்பரீக்ஷைசம்பந்தமாகச் செலவு	170	13	...			
மொத்தம் ரூ ...	633	9	1	315	12	...
II EDITORIAL SECTION:						
(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	170	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனரி கன்டின்ஜன்ஸி வகையிற் செலவு ...	41	5	...			

(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	60	1	...			
மொத்தம் ரூ ...	68	9	...	32	5	...
III Press Section:						
(1) சங்கவேலைகள் சம்பந்தமாக அச்சுக்கூலி வகையில் வரவு	97	8	...			
(2) ஷை வேலைகள் சம்பந்தமாக் பைண்டிங் கூலி வகையில் வரவு ...	3	...	...			
மொத்தம் ரூ ...	100	8	...	101	8	

(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு ...	73	...	...			
(4) தபால், தந்தி வகையிற் செலவு. ...	6	...	...			
மொத்தம் ரூ ...	290	5	...	120	12	6
III Press Section:						
(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம செல்லாக்கியது ...	48	2	10			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	5	...	3			
மொத்தம் ரூ. ...	53	3	1	53	13	2

ஆகமொத்தம் வரவு ரூ ...	732	10	9	663	7	9	ஆக மொத்தம் செலவு ரூ ...	977	1	2	490	5	8
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	459	2	2	686	10	2	மாத முடிவில் மீதி இருப்பு ரூ ...	*214	11	9	859	12	3
ஆகமொத்தம் ரூ ...	1191	12	11	1350	1	11	ஆகமொத்தம் ரூ ...	1191	12	11	1350	1	11
							*By M. R. C. C. Bank Pass Book in current account Rs. 50- 0- 0 Amounts under suspense account as per vouchers from staff 94- 8- 0 Cash on hand Rs. 70- 3- 9 214-11- 9						

குறிப்பு:—மேலே கண்ட விவரப்படி இம்மாத முடிவில் மீதி இருப்பு ரூ. 214-11-9 தவிர, ஆபீஸ் மூலதனங்களாக உள்ளவை:—மதுரை M. R. C. C. Bankல் கட்டியுள்ள Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; (3) ரூ. 1001; மதுரை இம்பீரியல் பாங்கில் கட்டியுள்ள Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 10000; (3) ரூ. 5000; ஸௌராஷ்டிர [illegible] அவமேன்மையில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1,200 ஆகும்.

Audited and found correct,
V.S. RAMASWAMI, AUDITOR, 10—3—

LAKSHMINARAYANAN,
MANAGER, 7—3—'38.